பாரதி மைந்தனின்

# துளிர்விடும் கனவுகள்



JPL
C12649

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளிர்விடும் கனவுகள்

KOHA
JPL

பொதுசன நூலகம்,
யாழ்ப்பாணம்.

265033

265033

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

894.8111

# சமர்ப்பணம்

அன்பான அன்னைத் தமிழுக்கும்
தன்நிகர் இல்லா ஆற்றல் அறிவுடன்
என்னை ஈன்று வளர்த்த தாய் தந்தைக்கும்
கிருஷ்வினுக்கும் ஒவ்வொரு பொழுதிலும்
என்னை காக்கும் என் சகோதர
உறவுகளுக்கும் துன்ப வேளையிலும்
இன்பமாய் காத்த சித்தப்பா
அமரர் அமலதாஸ்அவர்களுக்கும்
முகநூல் தந்த அன்பு அண்ணா
அமரர் ஜெயக்குமார் அவர்களுக்கும்
இன் நூல் சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| தலைப்பு | :- | துளிர்விடும் கனவுகள் |
| நூலின் வகை | :- | கவிதை |
| நூலாசிரியர் | :- | பாரதி மைந்தன் (அ.கிளைம்சென்) |
| வெளியீடு | :- | மந்துவில் பாரதிதாசன் சனசமூக நிலையம் |
| பக்கங்கள் | :- | 97 |
| பிரதிகள் | :- | 500 |
| பதிப்புரிமை | :- | ஆசிரியருக்கு |
| அட்டைப்படம் | :- | அ.இக்னேசியன் |
| நூல்வடிவமைப்பு | :- | ஜெயஸ்ரீ பிறிண்டேர்ஸ், |
| முதற்பிரதி | :- | 2018 |
| தொடர்பு | :- | பாரதி மைந்தன் ( அ.கிளைம்சென்)<br>பாரதிதாசன் வீதி, வட்டாரம் - 8<br>மந்துவில், புதுக்குடியிருப்பு,<br>முல்லைத்தீவு.<br>Claimsen25@gmail.com<br>077 9071472, 077 6584179 |
| கணணிப்பதிப்பு | :- | ஜெயஸ்ரீ பிறிண்டேர்ஸ்,<br>34, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் |
| ISBN No | :- | 978 - 955 - 71109 - 0-5 |
| விலை | :- | 300/= |


பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை



ஆண்டவரில் மகிழ்ச்சி கொள்.உன் உள்ளத்து விருப்பங்களை அவர் நிறை வேற்றுவார். ஆண்டவரிடம் ஒப்படைத்து விட்டு அவரையே நம்பியிரு அவரே உன் சார்பில் செயலாற்றுவார் [சங்37:4-5]

"துளிர்விடும் கனவுகள்" எனும் கவிதைக் கொத்தின் ஆசிரியர் அருள்தாஸ் கிளைம்சென் பாரதி மைந்தன் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்துவில் எனும் ஊரில் பிறந்து மன்னாரில் வளர்ந்து மீண்டும் தன்னூர் வந்து பத்திரிக்கைக்கும், வானொலிக்கும் பல கவிதைகளை எழுதியவர். தனது கன்னிப் படைப்பான "உணர்வுகளின் பாதை" எனும் கவிதை நூலைத் தொடர்ந்து சிறிய காலத்துக்குள் மீண்டும் தனது 2வது கவிதை நூலை வெளியிடுவதையிட்டு பெருமைப் படுகிறேன். பல்வேறு இன்னல்கள், துன்பங்கள் மட்டுமன்றி உறவுகளையும் உடமைகளையும், உரிமைகளையும், இழந்து வேதனையில் மூழ்கியிருக்கும் எமக்கு இறைவன் ஒருவனே விடுதலை அளிக்க முடியும். என்பதை வலியுறுத்தியிருக்கிறார். இனவெறியும், மதவெறியும் இல்லாமற் போகவேண்டும். இனம் கண்ட அணுப்பரம்பல் நன்மையாக மிளர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனங்களிடையே புரிந்துணர்வும் சமத்துவமும் நிலைக்கவேண்டும். மனங்களிலே மனித நேய உறவு எங்கும் மலர வேண்டும் என்னும் உள்ள ஆவலை வெளிப்படுத்தியிருக்கிறார். தான் பெற்ற மகிழ்வு, அழகுணர்வு, தான் நுகர்ந்த நறுமணத்தை மற்றவர்களும் உணர்ந்து மகிழ மிகவும் அழகுற இந்நூலை வெளியிட்ட ஆசிரியரின் படைப்புக்கள் பற்பல இன்னும் உதயமாக வேண்டுமென அவரை வாழ்த்தி என் நன்றிகளையும் நல்லாசிகளையும் கூறி நிற்கின்றேன்.

இக்கவிதை நூலை சுவைக்கும் அனைத்து உள்ளங் களிலும் மகிழ்ச்சி நிலவும் எதிர்பார்ப்புக்கள் நிறை வேறவும் இறையாசிகள் வேண்டி வாழ்த்துகின்றேன்.

ஞா.ஞானறூபன் செ.தா
அருள் ஆச்சிரமம்
05,கோவில் வீதி,
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



இளம் எழுத்தாளர் பாரதி மைந்தன் எனும் புனைப்பெயரைக் கொண்ட அ.கிளைம்சென் அவர்களின் கவிதைத் தொகுப்பு நூலிற்கான வாழ்த்துச்செய்தி ஒன்றை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். கவிஞர்களும், படைப்பாளிகளும் தமது படைப்புக்களின் ஊடாக கவி இலக்கிய நயத்தை வெளிக்கொணர்வதுடன் ஒவ்வொரு கவிதை வடிவங்களும் தமிழ் மக்களின் வீரத்தினை, கலை கலாச்சாரத்தினை தொலைத்த எமது இன்பங்களை அன்றாட வாழ்வில் நாம் அனுபவிக்கின்ற இன்ப துன்பங்களை எடுத்துக்காட்ட முடிவதுடன் மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட பின்பற்ற வேண்டிய ஒழுக்க முறைகளையும் மற்றும் அறிவியல் செயற்பாடுகளையும் எடுத்துக் கூறுவன.

அந்தவகையில் பாரதி மைந்தனின் இப்புதிய படைப்பில் பெண்ணியம் காப்போம் என்ற தலைப்பில் பெண்மை எல்லாம் பொம்மையல்ல பெண்ணியம் காப்பதே பெருமை. என்ற பொருள்பட புனைந்துள்ள கவிதை போற்றுதற்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டதே காட்சி கொண்டதே கோலம் என தற்கால கவர்ச்சி நாகரீகங்களில் மதிமயங்கி உழன்று கொன்றிருக்கும் இள நங்கைகளின் உணர்வுகளை நேர்வழிப்படுத்தக் கூடிய கவிதைகளும் சிறப்புக்குரியன. மொத்தத்தில் கவிதைத் தொகுப்பு பாராட்டுக்குரியது.

எமது இளைய சமூகத்தில் இவ்வாறான இலக்கியப் படைப்பாளிகளின் படைப்புக்கள் வரவேற்புக்குரியன. இளம் படைப்பாளி பாரதி மைந்தன் அவர்களின் இலக்கிய பணிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்,
முதலமைச்சர்.
வடமாகாணம்.

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர்
வடமாகாணசபை
யாழ்ப்பாணம்

## வாழ்த்துச் செய்தி



தம்பி பாரதி மைந்தன் இளையவர் துடிப்பு மிக்க கவிஞர் வரலாறு தன் பக்கங்களை வாழ்வோர் அனைவரையும் கொண்டு நிரப்பிக்கொள்வதில்லை. வல்லமை படைத்தவர்களையும் நல்லவர் களையுமே தன்னகத்தில் தேடி சேர்த்துக் கொள்கிறது. அவ்வரிசையில் நல்லவராகவும், வல்லவராகவும் புலப் படுவர் தம்பி பாரதிமைத்தன் என்றால் மிகையில்லை. இவரது கவிதைகள் பலவற்றை முக நூலில் வாசித்திருக்கிறேன். அக்கவிதைகளை நேசித்திருக் கிறேன். அதில் ஒரு தனித்துவமும் எளிமையும் இழையோடும். அதுவே இவரின் பலமென்று கருதுகிறேன். இவர் உணர்வுகளில் பாதை என்ற சிறந்த பாசத்தை தட்டியெழுப்பும் நூலை தந்த சிறந்த படைப்பாளி. இவரின் படைப்புகளில் ஒரு முக்கிய இடத்தைப் பிடிக்கப் போகும் நூல்தான் இந்த "துளிர் விடும் கனவுகள்" தலைப்பே சற்று வித்தியாசமான பார்வை அவரிலிருந்து துளிரந்த கனவுகளைத் தூக்கி எறிந்து விட்டுப் போகாமல் பாதுகாத்து பைந்தமிழ் நூலுக்குள் புகுர்த்தி அதற்குத் துளிர்விடும் கனவுகள் என்று தலைப்பிட்டிருக்கிறார். வரவேற்போம் வரவேற்கும் வாசகர் உலகமும். இவரது பன்முகத்திறமை நம்பிக்கை ஆச்சரியப்படுத்தும் ஒன்று சமூகசேவை வானொலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது, பாடலுக்கான வரிகளை எழுதுவது, பல்வேறு முகநூல் குழுமங்களில் நீதி தவறாத நடுவராக வலம் வருவது அத்துடன் தமிழ்ச் சிறகு இலக்கிய மன்றத்தின் தலைவராக இருந்து தமிழை வளர்க்கப் பாடுபடுவது அத்துடன் நாடகத் துறையிலும் தனது வாழ்வை கழிப்பது இப்படி சொல்லிக்கொண்டே போகலாம்.

அத்தகையப் புகழுக்கு புகழ் சேர்க்க துளிர்த்தது தான் இந்த துளிர் விடும் கனவுகள். இவர் இன்னும் இதுபோன்ற நூல்களை வண்ணமாக்கவேண்டும். அவைகளை நாம் வாசிக்கவேண்டும். இம் மட்டில் தம்பி கவிஞர் பாரதி மைந்தனை வாழ்த்தி மகிழ்கின்றேன்.

அன்பன்
கவிஞர் பொன்மணிதாசன்
02.40.1,சுண்ணாம்புக்காரத்தெரு
பாப்பாக் கோவில் 611102
நாகப்பட்டினம்,தமிழ்நாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தமிழ் கவிஞனுக்கு வன்னி மகனின் வாழ்த்து



கவின் மீட்டும் ஆளுமை கொண்டு
கவி பாடும் பாரதி மைந்தனின்
துளிர் விடும் கனவுகள் எனும்
கவிநூலானது மிருகேந்திரத்தின்
கர்ச்சனையோடு உழுவையின் பாச்சலோடு
பருவதத்தின் உயர்ச்சியதாய்
ஓங்கல் குழாயினால் செவிப்பறைகளை
வெற்றி எனும் நாமம் கொண்டு
தட்டிச் செல்வதை இவன் கவி படித்து
எனக்குள் புரிந்திருக்கிறேன்.

கவிதை என்பது .! பாமரனும்
எளிதில் விளங்கி ஓர் மாற்றத்திற்கான
முன்னெடுப்பாக நிலைத்திட.
சிந்தனை மிகு சமூக கருத்துகள்
மாற்றத்திற்கான துளிர்ப் புரட்சி
மனதை வருடும் கற்பனை உணர்வு
சிந்திக்க வைக்கும் சொற் தொடர்
இலக்கியப் பிழையின்றிய
கவிதைப் படைப்பின் தனித்துவம்
பிற மொழி கலப்பில்லாத
தன் வழித் தமிழ் மொழி நேர்கோடு
என இவன் படைப்புகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்தன்மை பார்க்கிறேன்.
பொழில் வீசும் பொய்கை தழல்
பனுவலில் செய்யுள் கொண்டு
ஒன்னார் செயல் கிழித்து
என்னாள் வரைதனில் உன்புகழ்
மேதினியில் நிலைத்திடும்
செரு களமாடும் உன் உரு படைப்புகள்
பீடையற்றதோர் வாழ்வை வரமாக்கும்
பரிவில் தொடங்கி ஈறுவிலாகும்
துளிர் விடும் கனவுகள் எனும் கவிநூலானது பாமரனையும்
தாண்டி மாந்தர் மனங்களிலும் துளிர் விடும்.

சோதியுற்ற உன் வரியில் கம்பலை
கருக்கொண்டிருக்கிறது
கசடு அற்ற உன் அகத்தில்
பற்று ஈரத்தோடு இனிக்கிறது
குழாம் கூடி செவ்விக்காய் காத்திருந்து
ஒல்லுநர் உறவினை நாடி
உனக்காக ஓர் மகுடம் கேண்மை நிறைவுடம் மேன்மையதாய்
தேடி வந்து வாழ்த்தி விடும் உன்கனவுகளும் ஆழமாய்
ஊடுருவி துளிர் விடும்.

துளிர் விடும் கனவுகள் எனும் கவிநூலில் காதல்
உணர்வுகளையும் காலத்தின் தேவைகளையும்
நேரம் உணர்ந்து எழுதியிருக்கும் உனக்கு நான் வாழ்த்து
எழுதுவதை வரமாகவே கருதுகிறேன் வலமாகவே
எழுதுகிறேன் வசந்தம் வீசட்டும்
இலக்கியப் பரப்பில் எழுந்து நிற்கும் நாணல்களாய் உன்
படைப்புகள் மீண்டும் மேன்மேலும் தொடரட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு சிலவற்றைக் கடக்கையிலும்

பிறந்த உயிர்களும் கருக் கொள்ளும் என்பதைக் கூறி துளிர் விடும் கனவுகள் எனும் கவிநூலானது நிலையான ஓர் தடம் பதிக்கும் என்பதை அகத்தினால் உறுதி கூறி அன்பாக உனை வாழ்த்தி

விடைபெறும் நான் உன் நண்பன்

செந்தணல் எனை எரித்திடும் முன்
செந்தமிழ் கொண்டெழுந்திட
வன்னித்தாய் வீரத்தோடு
ஈன்ற மகன் வன்னியூர் கிறுக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

# செந்தமிழ் கவிஞனுக்கு
# என் கவியில் வாழ்த்துக்கள்!



இன்பத்தமிழ் சொல்லெடுத்து
வாழ்த்துக்கவி தான் படைத்து
இதயம் நிறைந்த மகிழ்வுடன்
செந்தமிழ் கவிஞனுனை வாழ்த்து கின்றேன்!

பைந்தமிழில் கவி படைத்து
எம் தமிழை வாழ்விப்பவனே
அன்னைத் தமிழ் அழகினில்
உன்னைத் தினம் காண்கின்றேன்

வெள்ளை மனம் கொண்ட
முல்லை மலர் நீயே
எல்லை இல்லா அன்பினில்
உன்னை ஆள யாருமில்லை

தினம் நூறுகவிபடைத்து
மனம் மகிழ நீ வாழ்ந்து
குணம் நிறைந்த செயல்களால்
குவலயம் வாழ்த்த நீ வாழ வேண்டும்

பாசத்தின் ஊற்றென
நேசத்தால் நிறைந்தவனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துளிர்விடும் கனவுகள்
விருட்சமாக வேண்டும் உன் வாழ்விலே

எண்ணங்கள் உயர்ந்திட
உள்ளத்தின் உணர்வுகளை
வரிகளில் செதுக்கி நீயும்
கவிதையில் வாழ்ந்திட வேண்டும்

நல்வாழ்வு நீ வாழ்ந்து
நலம் நாளும்பெற வேண்டும்
வந்து போகும் சோதனைகள்
வாழத்துச் சொல்லும் சாதனைகளாக வேண்டும்

"வாழ்க தமிழ்
வளர்க உன் கவி"

நேசமுடன்
கவிதாயினி நிவேதா நிவேதிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலாச்சுடர் நாயகனுக்கு
# வாழ்த்துப்பா



எழுத்தினையே தன்மூச்சாய் கொண்டு
நித்தம்
எல்லோருக்கும் நல்லோனாக வாழ்வு
பழுத்தப் பழமென்றே நல் இனிமை
தாங்கி
பண்போடு வாழ்கின்ற முடிவில் நன்று

விழுதென்றே பிறர் நலமே போற்றி சேவை
விரும்பியே உம் பக்கம் நல்மனிதர் ஈர்க்கும்

கொழுக்கொம்பாய் உறுதுணையாய் உதவும் சீர்மை
கொடுத்திடுமே உமக்கு நல் உயர்வு தன்னை
பட்டங்கள் பதவிகளால் சிறப்பைப் பெற்று
பாரினிலே உயர்வினையேக் காணும் போது

திட்டங்கள் வகுத்து நீரும் வாழ்தல் நன்றாம்
திகட்டாத இனிமைகளால் நிறைக வாழ்வு
வட்டம் போட்டு தன்னலத்தில் வாழ்வோர் வீழ்த்தி
வருந்துவோர்க்கு உற்ற துணை காணல் சீராம்

எட்டயியலா வெற்றிப் படிகள் கூறி
எப்போதும் ஈடில்லா இன்பம் காண்க
இல்லார்க்கு உதவுகின்ற பண்பு உம்மை
இமயமாக உயர்த்துவதில் ஜயம் ஏது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லாலே பாப்புனைந்து சொக்க வைக்கும்
சொர்க்கம் தான் உம் கவிதை நானும் சொல்வேன்
பொல்லாப்பு உமை தீண்டா தெய்வம் காக்கும்
பொதிகை மலைத் தென்றலாய் வாழ்வு காண்க

எல்லாம் வல்ல தேவனவன் அருளால் என்றும்
எப்போதும் நீடூழி இனிதே வாழ்க

முனைவர் மரியதெரசா
9ஐயப்பன் கணபதி அடுக்ககம்
சிந்தாமணி தெரு
செந்தில் நகர் ,சென்னை 62

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனக்குள்ளும் துளிர் ஆனவன்



மண்ணுள் விழுவதெல்லாம்
மரமென்றாவதில்லை
உன்னுள் விழுந்ததெல்லாம்
மண்ணென்றானதில்லை

முகநூல் தந்த சொந்தம்
முழுவதும் அன்பில் இல்லை
எனை அகநூல் ஆக்கியதால்
நம்மூச்சின் ஆழம் எல்லை

உன்னால் முடியும் என்பேன்
உலகை ஆண்டுவிட
கல்வி கவித்துறையில்
கருத்தாய் உயர்ந்திடுவாய்

எழுதும் எழுத்தினிலே
ஏற்றம் கண்டு கொள்வாய்
“துளிர்விடும் கனவு” ஒன்றில்
எனை தூக்கி நிறுத்தி விட்டாய்

வாழ்த்தின் நாதம் உந்தன்
வயத்துக்கு பெரிதெனினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தின் வரிகள் இவை
கண்ணே வளர்ந்திடுவாய்

அன்பினில் இளையவளே
நீ ஆளும் நாள் வரையும்
உன்பின் தொடர்ந்திருப்பேன்
உயிரின் ஓசையதாய் .....

அன்பின் அண்ணன்
கவிப்புயல் தமிழ்சரண்
கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துப்பா



கவிபாடும் பூங்குயில் நீ
காவிய நாயகன் நீ
எழுதுகோல் ஏந்தி வந்து
எனை ஆளும் கவிஞனும் நீ!

பலநூறு கவிபாடி
பாவலனாய் வலம் வருவாய்
வாசகனின் மனதிற்குள்
சுவாசமாக நீயிருப்பாய்!

தடைபோடும் படைமுன்பு
விடை கூறும் நின் வரிகள்
நீ தளராதே தமிழ் மகனே
தமிழ் என்றும் உனைக்
காக்கும்!

சரித்திரம் நீ படைக்க
எனதினிய வாழ்த்துக்கள்
உன்புகழ் விண்ணைத் தொட்டு
பூமியெங்கும் பூச்சொரியும்

பாசத்தின் அண்ணா
கவிஞர் ரசிகுணா
மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணர்வுகளின் பாதை தந்த தாயுமானவனுக்கு ஒரு வாழ்த்து



பாரதியின் மைந்தனுக்குப்
பாவாலே ஒரு பாட்டு
பாரதிதாசன் தெருவில்
குடிகொண்டவனுக்கு
பார்போற்றும் கவி ஏட்டில்
ஒரு வாழ்த்து
பண்முகப் படைப்பாளிக்கு
தமிழாய் நல்வாழ்த்து

எண்மூன்று அகவைகள்
நிறைந்தவனுக்கு
எட்டாத தூரத்தில் இருந்து
தருகிறேன் நான்
எட்டும் வரை புகழ் எட்டும்
முத்தமிழ் சிந்துகவி
தொட்டுவிடத் துடிக்கும் உன்
ஆளுமைக்கு ஒரு கவி....

பெண்மையின் சிறப்புப்
போற்றியவனுக்கு
மென்மையும் புரட்சியும் கலந்தே
விதைத்தவனுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழுக்குத் தாலாட்டுப்பாடி
மகிழ்ந்தவனுக்கு
மண்ணில் தாய்மொழி காக்கும்
வல்லவனுக்கு என் வாழ்த்து

துளிர்விடும் கனவுகளின்
பிரவச வேளையிது
தூணாய் நீ நிமிர் துணிவோடு
புனை பல கவி
முத்தமிழ் வித்தகம் நிறைந்த
நிறை கவி வாழ்த்து

விருதுகளைத் தினம் குவிக்கும்
வித்தகனுக்கு
விருப்போடு படைப்பு நல்குத
இளவலுக்கு
முத்தாகத் தந்தேன் முழுமைத்
தமிழனுக்கு
முகநூலில் ஊற்றெடுக்கும்
உயிர்ப்புக் கவியாற்றலுக்கு
துளிர்விடும் கனவுகள் நனவாக
என் வாழ்த்துக்கள்

துளிர்விடும் கனவு விரைந்து
மண் தொடட்டும்
துள்ளியே என் தூரிகை
படைப்பால் உலகாளட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிச்சாசரத்துள்
முத்தெடுக்கும் முழுமதி நீ
பாரதி மைந்தனே பார் புகழ
வாழ்ந்திடுவாய்.....

பாசம் கொண்ட அக்கா
கவிஞர் சிவதர்சினி ராகவன்
சுவிஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை



இன்றைய இணைய உலகம் இவ்வுலகத்தை மட்டுமன்றி இதயங்களையும் எளிதில் இணைத்து விடுகின்றது. ஈழத்து உறவுகளைக் கண்டாலே இனம்புரியாத பேரன்பும் உடன் பிறந்த உவகையும் உள்ளத்துள் பெருக் கெடுக்கிறது. வேடிக்கை மனிதரைப் போல வீழ்வேன் என நினைத்தாயோ என்ற ஒற்றை வரி எம்மையெல்லாம் பாரதியின் பக்கம் ஈர்த்துக் கொண்டது.அப்படியே பாரதிமைந்தன் என்ற பெயரைக் கேட்டதும் பெருமகிழ்வு. கடலின் உடல் தமிழகத்திற்கும் ஈழத்திற்கும் இடையே எல்லை வகுத்திருந்தாலும் தமிழுணர்வு மனத்தால் எவ்வெல்லையையும் கடந்து சிறக்கிறது. அவ்வகையில் என் இளவல் பாரதிமைந்தனின் "துளிர் விடும் கனவுகள்" என்னும் இந்நூலுக்கு அணிந்துரை வழங்குவதைப் பெரும்பேறாக எண்ணுகிறேன். தூக்கத்தில் வருவதல்ல கனவ்எது தூங்காமல் செய்கிறதோ அதுதான் கனவு என்பார் இந்திய மேனாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம். அந்த வகையில் இக்கவிஞர் தன்னைத் தூங்காமல் செய்த கனவுகளைக் கவிதையாக்கித் தந்திருக்கிறார். "பாரதிமைந்தன் "என்னும் பெயருக் கேற்றவாறு இவரது கவிதைகளில் நாட்டுப்பற்று, மொழியுணர்வு, சமூகப்பார்வை, பெண்ணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றுதல், காதலின் கண்ணியம் காத்தல் போன்றவை முன் நிற்கின்றன. இயற்கையைக் காப்பது இவ்வுல கத்தின் இதயத்தைக் காப்பதே ஆகும். இயற்கையை அழித்தல் என்பது நமக்குநாமே மரணக் குழியைத் தோண்டிக் கொள்வதைப் போன்றதுதான். "பெற்றதாய் போல் காத்திடுவோம் உன் அழகிய கொடைகளை" என்று இயற்கையின் மீது தாயன்பைப் பொழிகிறார். தொலைக்காட்சித்தொடர்கள் வாழ்வின் இடர்களாகவே மாறி விட்டன. தொலைக்காட்சி தொல்லைக்காட்சியாகவே மாறி பல குடும்பங்களைச் சீரழிக்கிறது. "நாடகத்தின் காட்சி எல்லாம் இங்கு வீட்டினிலே நடக்கின்றது.. பிள்ளைகள் படிப்பு தினம் நடிப்பாகவே போகிறது" என்னும் வரிகள் எதிர்காலத் தலைமுறையினரைக் கெடுக்கும் தொடர்களின் இழிநிலையை எடுத்து ரைக்கிறது. இன்றைய உலகில் பிறரின் உயிரை எடுப்பவர்களின் மத்தியில் மற்றவர்க்காய் உயிர் தந்தவர் இயேசுபிரான் என்பதை," உலகத்தின் பாவத்தைத் தனதாக எண்ணியே என் தேவன் இயேசு உயிரைக்கூட தந்தாரே..." என்று கவிஞர் தன் ஆன்மீகச் சிந்தனையையும் அறவுணர்வையும் எடுத்தியம்புகிறார். "நெஞ்சு பொறுக்கு இந்த நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்" என்பார் பாரதி. நீதி எங்கே என்னும் தலைப்பில்," உலகம் என்னும் மேடையிலே சிறப்பாக நாடகம் நடக்குதையா தினம் பார்க்க பொறுக்குதில்லை இந்த பாவி மனமும்" என்று தன் மனக்குமுறலை வெளிப்படுத்துகிறார் பாரதிமைந்தன். " "நான் தீட்டும் துளிர்விடும் கனவுகளின் வரிகள் விடியலாகும் விரைவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்று பாரதியைப் போன்றே நம்பிக்கையை விதைக்கிறார்.விடுதலை அடையும் முன்பே விடுதலை அடைந்துவிட்டதாகப் பாடி, கற்பனையிலும் கவிப்புரட்சி செய்தவர் பாரதி. அதுபோலவே இக்கவிஞரின் கவிதைகளில் நம்பிக்கைத்தீபம் ஒளிர்வதைக் காண முடிகிறது. பாரதியைக் குருவாய், கவித்தந்தையாய் ஏற்றுக் கொண்டுள்ள இவரது கவிதைகளில் பாரதி பிறந்திருப்பதைக் காண முடிகிறது. அப்பாரதி வெறும் குழந்தையாகவே மட்டுமே கவிதைகளில் இருந்து விடக் கூடாது. வளர்ந்து, தமிழுலகம் உள்ளவரை நீடுபுகழைப் பாரதிமைந்தனின் வழியே ஈட்டிட வேண்டும். தொடரட்டும் பாரதிமைந்தா உனது கவிப்பயணம்.... ஆயிரமாயிரம் கவி படைத்துத் தமிழன்னைக்கு அணி சேர்ப்பாய்...

வாழ்க பல்லாண்டு....

இதயம்நிறை வாழ்த்துகளுடன்

முனைவர் இலக்கியத்தோழன்

ப.பெ.க.மூர்த்தி M.A,Ph.D,B.Ed

தமிழாசிரியர் பாணாதுறை மேனிலைப்பள்ளி

கும்பகோணம், தஞ்சை மாவட்டம்

தமிழ்நாடு, இந்தியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உந்துகின்ற என் பேனா உரைக்கின்ற கதை கேளீர்



"உணர்வுகளின் பாதையிலே" உறவாக ஏற்று அன்புடனே என்னைக்காத்து கவி எனும் பாதையிலே ஆதரவுதந்தே இன்றைய தின மதிலே "துளிர் விடும் கனவுகள்" எனும் இரண்டாம் நூலிலும் என்னுடனே தொடர்ந்து வந்து சமூக கருத்தை விதைக்க எத்தனிக்கும் எனக்கு உரமாக வரும் உங்களுடன் இணைந்தே உருவாக்கியுள்ளேன். இன் நூலையே

"துளிர் விடும் கனவுகள் " என்றே சமூகத்தின் ஏக்கங்கள் நிறைந்த வரிகளையே சிறு மணியாக இந்நூலினூடாக தரத்தந்துள்ளேன். என்வரிகளுக்கான விருதாக நித்தம் என் அருகிலே இருக்கும். என் உறவுகளை நினைத்துப் பெருமையடைவதுடன் இவ் வரிகளினால் சமூகத்தில் சிறு மாற்றம் ஏற்படும் என்ற சிறு தவிப்புடன் உங்கள் கைகளில் இன் நூலை தலை வணங்கி சிறியவனாய் தந்து நிற்கின்றேன்.

இன் நூலை சிறப்பாக வெளியிட உதவிய என் கிராமத்து பாரதி தாசன் சனசமூக நிலைய தலைவர், உறுப்பினர்கள் மற்றும் என் ஊர்மக்களுக்கும் என் நன்றிகளைக் கூறிக்கொள்வதுடன் என்னை இவ்வளவு காலமும் காத்து என் பணியில் துணையாக வரும் என்தாய், தங்கை, சகோதரர்கள், அண்ணிமார்களுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் நன்றிகளைக் கூறுவதுடன் என்னை உயிராய் எண்ணிக்காக்கும் அம்மம்மா, அம்மப் பாவுக்கும் கஷ்டத்திலும் குழந்தையாய் காக்கும் தம்பிமாமாக்கும் நன்றிகளைக் கூறிக்கொள்கிறேன்.

மேலும் என்பணியில் உதவியுடன் ஊக்கம் தந்து என் எதிர்பார்ப்புகளில் துணையாய் நின்று காக்கும் தமிழ்ச்சிறகு குடும்பத்திற்கும் நிர்வாகத்தினருக்கும் உறுப்பினர்களுக்கும் அத்தோடு சிறப்பாக என்னை ஆலோசனைகளாலும் ஊக்குவிப்பாலும் வளர்ந்து வரும் அருட்சகோதரி மேரிறோசி, வே.க.துவாகரன் மற்றும் நிவேதா நிவேதிகாவிற்கும், ராதைகுபேரன் தம்பி சஜீபன் (சசி) மற்றும் சுபா சாயி அக்கா அவர்களுக்கும் நன்றிகளைக் கூறிகின்றேன்.

என் கவிப் பயணத்தில் உடன் வரும் டான் ரீவி நிகழ்ச்சித் தொகுப்பாளர் பண்பலை வேந்தன் ரி.எஸ் முகுந்தன் அண்ணா மற்றும் து.திலக்அண்ணா **Tube Tamil Fm** அறிவிப்பாளர் அக்கா டிவானியாவிற்கும் அத்தோடு இந்நூலுக்காக வாழ்த்துரைகள், வாழ்த்துக் கவிகள், அணிந்துரை வழங்கிய அனைவருக்கும் நன்றிகளைக் கூறிக் கொள்வதுடன் சிறப்பாக என்முக நூலில் என் வரிகளை இரசித்து என்னை வளப்படுத்தும் என் ஈழத்து மற்றும் இந்திய முகநூல் நண்பர்கள் மற்றும் உறவுகளுக்கும் என் நன்றிகளைக் கூறிக் கொள் கின்றேன்.

என்பணிகண்டு என்னை ஊக்குவிக்க உதவிகள் செய்த அனைவருக்கும் நன்றிகளைக் கூறுவதுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பயணத்தில் துணைவரும் பக்குமாமா (ரேபோட் டெனிசன்), ரேனுகா அன்ரா, தங்கம் அன்ரா மற்றும் அப்பம்மா , சித்தப்பா விமலதாஸ் செபஸ்ரியம்பிள்ளை குடும்பத்திற்கும் நன்றிகளைக் கூறிக்கொண்டு என் உணர்வுகளை மதித்து ஆதரவு தந்து காத்து என் வளர்ச்சியில் துளிர் விடும் கனவுகள் சிறந்திட ஆதரவைத் தருவீர்கள் என்ற நம்பிக்கையுடன் காத்துள்ளேன்.

பாரதி மைந்தன் (அ. கிளைம்சென்)
8ம் வட்டாரம்
பாரதி தாசன் வீதி,
மந்துவில், புதுக்குடியிருப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

# கனவுகளின் இதழ்கள்

1. தமிழர் நாம்
2. தாய்ப்பால்
3. பசி
4. மனவலிமை கொண்டவர்கள் ஆண்களே
5. காதல் மானே
6. பயணம்
7. பெண்ணியம் காப்போம்
8. நெஞ்சுக்குள்ளே
9. அன்பிற்கு ஏங்கும் உயிர்
10. தமிழுக்குத் தாலாட்டு
11. தேவதை
12. வஞ்சி உன்னைக் கொஞ்சையிலே
13. முதியோர் இல்லம்
14. சிதைத்தது ஏன்
15. தூதுபோ தென்றலே
16. பட்டாம் பூச்சி
17. அன்பானவள்
18. மங்கையவள் அழகு
19. வியர்வைகளால் புதுயுகம் படைப்போம்
20. மரணம் விடு தூது
21. அழகே
22. நீதி எங்கே
23. தனிமை
24. மனிதத்தைச் சிந்தியுங்கள்
25. என்க்காக மரித்த உத்தமன்
26. காலத்தின் தாண்டவம்
27. என் பயணம்
28. தமிழன்
29.நட்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. என் வாழ்க்கை
31. சுமைதாங்கி
32. தாயே
33. நாடகம்
34. அன்பின் வீடு
35. கல்வியின் மகத்துவம்
36. எங்கு சென்றாய்
37. இன்ப விகள்
38. மதுபோதை
39. பசுமைப் புரட்சி
40. ஏங்கும் மனம்
41. இயற்கைத் தாய்
42. வாழ்வியல்
43. சந்தோசம்
44. இளமை
45. துளிர் விடும் கனவுகள்
46.கிராமம்
47. வைரமுத்து
48. இதுதான் உலகம்
49. கல்லூரிக்காதல்
50. பணம்
51. எங்கே
52. வாழ்வு தேடும் நெஞ்சங்கள்
53. புலம்பல்
54. காதலிக்கின்றேன்
55. முல்லைமண்
56. புரிதல்
57. ஏமாற்று அரசியல்
58. சாதி
59. மெளனம் காக்கும் ஊடகம்
60. பெண்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழர் நாம்

பல கனவுகள்
சில சாதனைகள்
அனைத்துமே எமக்கு
வாழ்வாய்ப் போனதுவே



ஆதி உலகத்தை
ஆண்டவன் தமிழன்
முதன்மை மொழியாய்
இருந்ததும் தமிழே
இருப்பதும் தமிழே

இன்றைய உலகமது
நாகரீக மோகத்தில்
தமிழை மறந்து
வேற்று மொழியினை
தினம் பிதற்றுகின்றது

தமிழின் பெருமையினை
வாழ வைக்க
இறந்த உறவுகள்

*பாரதி மைந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோடி உண்டு
எம் மண்ணிலே
உணருவாய் தோழா



நாகரீகம் என்பதைத்
தூரவிரட்டி
உன் வாழ்வில்
தமிழனாய் வாழ்வதில்
பெருமை கொள்

உலகம் தினம்
உன்னைப் போற்றும்
சென்ற இடத்தில்
தமிழனாய் விளங்குவாய்
பார் போற்றத் தினமும்



தமிழை மதிப்போம்
தமிழராய் இணைவோம்
தமிழே என் மூச்சு
இறந்தாலும் என்
உயிர் தாய்க்காக
கவி படைப்பதும்
அவளுக்காக

*பாரதி மைந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்ப்பால்



இரத்தத்தைத் தினம் பாலாக்கி
உணவாய்த் தந்தவள் தாய்
இன்று அந்தப் பாலையும்
அழகு இழந்து விடும்
என்று தினம் எண்ணியே
புட்டிப்பால் கொடுக்கும் தாயே
இது தான் தாய்மையா?



சிந்தித்துப்பார் பெண்ணே
உனக்கு தாயவள் தந்த
பால்தான் இன்று
உனக்கு அழகை தந்தது
அதையும் உணர்வாயோ
பெண்ணே

தாய் என்ற பெயரை
அழகு என்ற வேடமிட்டே
நாசம் செய்யும் பெண்களே
தாய்மையின் பெருமையினை நீயும்
தினமும் உணர்ந்திட வேண்டும்

*பாரதி மைந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உன்னைப் பெற்ற பெண்ணும்
தாய்மையினை காத்து வளர்த்ததனால்
நீயும் அழகாய் திரிகின்றாய்
எனியேனும் நீ உணர்ந்து
தாய்ப்பாலினை ஊட்டிடுவாய்



**என் காதலியே**

பொன் மாலை கோர்க்கும் அழகியே
உன் அழகிய முத்துச் சிரிப்பினிலே
நித்தம் என்னை கொள்ளை கொண்டு
எங்குதான் சென்றாயோ
என் காதலியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசி

வயிறு வாடியது

பசியும் கூடியது

உணவின்றித் தவிக்கிறது

ஏழை மனம்



மாளிகையில் நீயும்

உணவிற்கு அழகு பார்த்து

உணவை இடுகின்றாய்

குப்பைத் தொட்டியில்

தவிக்கின்றோம் நாமும்

பழுதடைந்த உணவும்

கிடைக்காதா என்றே

மனிதம் எங்கே

கூறுங்கள் தோழர்களே

மாளிகையில் நீயும்

பிள்ளையாய் நாயை வைத்து

உணவு போட்டு

பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காக்கும் உனக்கு
வீதியில் தவிக்கும்
எம்மைத் தெரியவில்லையா



பிஞ்சு உள்ளங்களாய்
பசியின் கொடுமையுடன்
வாடுகின்றோம் தினமும்
நாங்கள் இங்கு



எம் பசியின்
கோலத்தை உணர்ந்திடுவாய்
என் உறவுகளே
எனக்கு உணவு தந்து
காத்திடுவாய் வாழ்வினிலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனவலிமை கொண்டவர்கள் ஆண்களே

அறிவாற்றல் தந்திடவே அயராது
உழைத்திடுவான்
ஆசைகளைத் தனக்குள்ளே வைத்துப்
புதைத்துடுவான்
உடல் தனில் சோர்வுகள் வந்திட்ட வேளையிலும்
உயர்வான வாழ்வினையே
வீரத்துடனே கொண்டு சென்றிடும் ஆண்மகனே

ஆசைகள் பலவிதம் தன்னுள்இருந்தும்
அவமானங்கள் நூறு உலகில் கண்டும்
தன்மானம் கொண்டு உலகை ஆளுகின்ற
இறைவனின் உன்னதப் படைப்பாம் ஆண்களே

குடும்பத்துக்காய்த் தன்னைத் தினமுமே உருக்கி
மனைவிக்காய் என்றும் அன்பைப் பரிசாக்கி
குழந்தைக்காய் வியர்வைதனை இரத்தமாய்ச்
சிந்தியே
மகிழ்ந்திடுவான் தன்உடலினையே பாராது

*பாரதி மைந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனவுகள் தினம் தனக்குள்ளே சுமந்து
தனக்காக வாழாமல் தியாகச் சுடராய்
குடும்பத்தின் நலனுக்காய் தன்னை உருக்கியே
வாழ்கின்ற தெய்வீக அருளாம் ஆடவர்களே!

வறுமையினை மனதினிலே வைத்துக்
கொண்டே
மனவலிமை ஆயுதத்தால் உலகத்தினையே
தினம் வென்றிடுவான்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காதல் மானே

காதல் சொல்ல வந்தேன்
என்நெஞ்சின் தேவதை நீயே
என் உயிரைக் கொல்லும் பூவே
நீ வந்தால் போதும் நெஞ்சில்
என் காதல் பூக்கும் இங்கே



அடமுத்தம் தந்தேன் நானே
நீ விட்டுச் சென்றதேனோ
என் காதல் சொல்லும் பூவே
நீ வந்தால் போதும் பெண்ணே



முத்தம் தந்த நீயும்
என்னைக் கட்டிக் கொள்ள வேண்டும்
என் காதல் மன்னன் நீயே
அதை உலகம் சொல்ல வேண்டும்

கண்ணீர் வேண்டாம் கண்ணே
உன்னைக் கட்டிக் கொள்வேன் நானே
நெஞ்சம் உள்ள வரையில்

*பாரதி மைந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீ தான் எந்தன் தேனே
காலம் உள்ள வரையில்
எம் காதல் வாழும் பெண்ணே
மாலை சூடி நானே
உன்னைத் தூக்கிச் செல்வேன் மானே



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

**துரோகம்**

நண்பனின் கைகுலுக்கல்
நகைப்புடனே ஏற்கிறேன்
துரோகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பயணம்

பேரூந்தில் சிறு பயணம் ஒன்று
நாகரீக மோகம் கொண்ட உலகினிலே
சிந்திக்க வைத்து சென்றது என்னை

பேரூந்தினிலே இயற்கையை இரசித்த பயணம்
அழகாய் வந்து இணைந்தார்கள் அங்கே
செல்லமாய் மாணவ மணிகள் சில
இணைந்தே பயணம் விரைவாய் போகையிலே
அருகினிலே நாகரீக மோகத்தின் தாண்டவம்
பச்சிளம் பிள்ளைகள் இருப்பதும் அறியாமலே

காதலை பகிரும் இடமா இது
புரியவில்லை நாகரீக வளர்ச்சியின் காலத்திலே
வளரும் பிள்ளைகளை சீரழிக்கும் செயற்பாடாய்
உங்கள் காதலின் அரங்கேற்றம் பயணத்திலே

கட்டியணைக்க வீடு இல்லையா உங்களுக்கு
பேரூந்து தான் கிடைத்ததா சொல்லுங்கள்
பிஞ்சு மனங்களில் நஞ்சை விதைக்கின்றீர்களே
உணர்வுகளின் வலைகளில் நீங்கள் சிக்கியே

உணருங்கள் பயணத்தின் புனிதம்தனை
சீரழிக்காமல் சமூகத்தை காப்பது கடமை
என்று எண்ணியே பயணத்தை தொடருங்கள்

*பாரதி மைந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்ணியம் காப்போம்

நாகரீக வாழ்க்கையிலே காலங்கள்
போகின்றன
நாமும் அதை உணரவில்லை வாழ்வினிலே
உணர்வுதனை வெளிக்காட்ட வீடு இல்லையா?
உலகம் பார்க்க நடு வீதியிலா?
உணர்வுகளின் அரங்கேற்றம் செய்கின்றாய்
நீயும்

காமம் தீர்க்கப் பச்சிளம் பிள்ளையா
கயவா உனக்கு கேட்கின்றதா வாழ்வினிலே
கருணை இல்லா உன்னிடமே கேட்கின்றேன்
காமம் என்ற சிறு நிமிட
உணர்வை நீயும் இங்கு கழித்திடவே
உயிரை அழிப்பதும் சரிதானோ சொல்லிடடா

பெண்மை எல்லாம் பொம்மையல்ல
வாழ்வினிலே
பெண்ணியம் காத்தே நடப்பது கடமையடா
அதையும் உணர்ந்தே நீயும் நடந்திடுவாய்

*பாரதி மைந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெஞ்சுக்குள்ளே

நெஞ்சுக்குள் உன்னை வைத்து நானும்
காத்துக்கிடக்கின்றேன் காதற் பெண்ணே
காதலன் என்னை காணமல் நீயும்
நித்தம் தவிக்க விட்டு செல்வதேனோ
சொல்லிவிடு

ஆசையுடன் உன்னை நானும் அணைத்திடவே
உள்ளம் என்றும் ஏங்கையிலே நீயும்
அறியாமல் செல்லும் மாயம் என்ன
சொல்லிவிடு என் காதல் மயிலே

உன்னைத் தினமும் காணவென்று நானும்
உருவத்தை படமாய் வரைந்து வைத்துள்ளேன்.
என் அழகிய இதயத்தின் அறையினிலே
அறியாயோ என் இனிய மயிலே

உன் நினைவுடனே தினமும் உறங்குகின்றேன்
காதல் நிலவே உன்னை எண்ணியே
வந்துவிடு என்னுடனே காத்துள்ளேன்
காதலனாய்

பாரதி மைந்தன்

12649CC



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பிற்கு ஏங்கும் உயிர்கள்

உலகம் எனும் மேடையிலே
தினந்தினம் நாடகக் காட்சியையா
நாகரீக மோகம் தனில்
வாழ்வை உணராமல் தவிக்கின்றோம்

அன்பென்ற பெயரில்
காதல் நாடகம் இன்று
நாளை காமத்தின் ஆசையிலே
உங்களையே மறந்து
இழக்கிறாய் கற்புதனை

காமத்தால் விளைந்தபிள்ளை
இன்று வீதியிலே
யாரும் இல்லா உறவாக
அன்பிற்கு ஏங்கும் உயிர்களாய்
வாழுதையா சமூகத்திலே



பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அன்பிற்கு விலை பேசி
நீ கொண்ட ஊடல்
அன்பிற்காய் ஏங்க வைத்து
மகிழ்வுடனே போகுதையா
உங்களின் அழகான வாழ்க்கை

அனாதை மடம் தனிலே
யாரும் அற்ற உறவாக
தவிக்கும் உள்ளங்கள் நாங்கள்
யார் அறிவார் எம் நிலை
ஏங்கும் உணர்வுகளை உணருமா சமூகமே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழுக்குத் தாலாட்டு

அன்னைத் தமிழே உன்னைத்
தாலாட்டுகின்றேன்
ஆசையோடு உன் பிள்ளை நானுமே

அழகிய இலக்கணம் இலக்கிய அணிகலனோடு
அமுதேந்தி வரும் இனிய தாயே

தாய்மொழியான தமிழ் மொழியே
தனையனாய்த் தழுவி உயிர் வளர்க்கின்றேன்

இனிய கீதங்களை தினம் இசைப்பவளே
ஈரடித் திருக்குறளையும் தமிழுக்காகத் தந்தாயே

கவிநயத்துடனே உன்னழகைத் நித்தம்
கூறிடவே
கானமழை வரிகளிலே தாலாட்டுப் பாடிடுவேனே

கனிவாக நித்தம் இன்பம் பொங்கிடுவாய்
உன் இனிய அமுத மொழியினிலே
உருகுகின்றேன் மருகுகின்றேன் தாலாட்டுப்
பாடியே

பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேவதை

**ந**ந்தவன வீதியிலே
அழகிய தேவதை
அவள் ரோஜாப்
பாதங்கள் வீதியிலே
மென்மையாய் மெல்ல
நடை போடையிலே



அவள் மெல்லிடைகள்
அசையும் அழகினிலே
மனதைத் தொலைத்து
வெண்ணிலா போன்ற
முகத்தின் அழகினிலே
அதிசயங்களைக் கண்டேன்

கொவ்வைப் பழத்தின்
அழகான சிவப்பு
உலாவிடும் தேன்
வடியும் உதடுகளும்
கருவண்டுகள் போன்ற
கருமை நிறைந்த
அழகான விழி அழகியவள்

*பாரதி மைந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அவள் கரங்கள்
செந்தாமரை அழகினிலே
என்னைத் தினம்
கொல்கின்றதே தேவதையே

### பொன்னு விளையுற பூமி

பொன்னு விளையுற பூமியம்மா
இது பொன்னனு விளையுற பூமியம்மா
மக்கள் நிலையைத் தினம் பாத்திடம்மா
உன் சேற்றில் கால் வைக்கையிலே
என் வீட்டில் உலை கொதிக்குதம்மா
நித்தம் தந்திடுவாய் உன் அருளை

பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வஞ்சி உன்னைக் கொஞ்சயிலே

அத்தை பெத்த வஞ்சி மகளே
ஆசையாய் மாமன் உன்னை எண்ணியே
காத்தே இங்கு நித்தம் இருக்கையிலே
காணாமல் நீயும் எங்கு போகிறாயோ...?

ஒத்தையடி பாதையிலே ஒய்யாரமாய்
போகையிலே
ஓரக்கண் பார்வையும் சுண்டி இழுக்குதடியே..!

அத்தானின் மனதும் உன்னை எண்ணியே...
அன்பாலே வாடி தவிக்குதடி நித்தமும்
அறியாயோ ஏ.... பொன் மயிலே...!

அத்தைமக உன்னை நினைக்கையிலே
ஆசையாய் மாமன் மனமும் உருகுதடி..!
வஞ்சி மகளே உன்னை கொஞ்சிடவே..!
இந்த அத்தான் மனமும் ஏங்குதடி..!

*பாரதி மைந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



KOHA

உனக்காக காத்திருக்கேன் மாமன் நானும் ....
உன் கொஞ்சும் மொழி வார்த்தையிலே...
உன்னை எனக்கு தந்துவிடு ... தேனே...!

நித்தம் உன்னை கொஞ்சிடுவேன் பூமணியே
நீயே என் உயிரான கண்மணியே...!

வஞ்சியே உன்னை அனுதினம் அணைத்தே
காதல் மொழியினையே பரிசாய் தந்திடுவேனே..!
வந்துவிடு என் அழகிய பால் நிலவே...!

**நாகரிகம்**

வறுமை என்றே உலகம்
நித்தம் காட்டுகின்றன
நாகரிகம் என்ற பெயரில்
உடையைக் கிழிந்து போட்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முதியோர் இல்லம்

அன்புடனே பத்துத் திங்கள் சுமந்தவள்
பாசமாய் தோழனாய் என்னை வளர்த்தவன்
இரு உயிரான உறவுகள் இருந்தும்
வாடுகின்றேன் தனிமையின் கொடிய
சிறையிலே

மகிழ்ச்சியாய் நான் செய்த காரியம்
இன்று என்னை கண்ணீரில் வாட்டுகின்றது
என்ன செய்வேன் என் நிலைமை

பெற்றவர்கள் நிலையை அறியாமல் நானும்
துரத்தி விட்டேன் முதியோர் இல்லம் தனிலே
இன்று தவிக்கின்றேன் தனிமையிலே
நானும் முதியோர் இல்லச் சிறையிலே

அன்று என்னை பெற்றவர்கள் அனுபவித்த
துன்பத்தின் வலிகளை இன்று உணர்கின்றேன்
நானும் சிறையில் வாடும் வேளையில்

*பாரதி மைந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிதைத்தது ஏன்

அன்புடன் வாழ்ந்த எம் காதல்
இதயத்தில் தினம் புதைந்து கிடக்கையிலே
புகைத்தல் எனும் ஆயுதம் ஏந்தி
என் வாழ்வைச் சிதைத்தது ஏன்?

காதல் கொண்ட கன்னி நானும்
தனிமையிலே தவித்து இங்கு நிற்கையிலே
என் அன்பைத் தினமும் உணராமல்
புகைத்தலை நீயும் காதலித்தே இன்று
தனிமையில் எம்மை விட்டு சென்றாயோ!

புகைக்கும் போது நீயும் எம்மை
ஒரு கணம் நினைத்தே இருந்தால்
இன்று நாங்கள் தனிமையில் வாடும்
இந்த கொடிய நிலையும் வந்திருக்குமா?

இருப்பவர்கள் என்றாலும் உணருங்கள் தினம்
புகைத்தலை விட குடும்பம் முக்கியம்
என்றே உணர்ந்து திருந்திடுங்கள்
குடும்பத்தை காதல் செய்திடுங்கள்

*பாரதி மைந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தூதுபோ தென்றலே

பெண் மயிலே
உன்னில் கொண்ட
காதலில் நானும்
காத்திருக்கின்றேன் அறியாயோ!

தேனிசையைக் கீதமாக்கி
தென்றலில் அனுப்பினேன்
உனக்காக என் தேவதையே!



உன் அழகான
சிறு புன்னகையில்
புதைந்து போகிறேன்
தினமும் நான்

நீ புரியாமலிருக்கிறாயா
இல்லை புரிந்தும் புரியாமலா?
என் தென்றலிடம் தெரிவிப்பாயா!

வந்த தென்றல்
உன் வனப்பை
வரி வரியாகச்
சொல்லித் திரும்பியது
உன் அழகினை ஆராதிக்கிறேன்

*பாரதி மைந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அந்த நிமிடம் முதல்
ஒரு வார்த்தை சொல்
ஒற்றை வார்த்தையிலே
ஒட்டிக் கொண்டு
என் உயிர் வாழும்!

அந்த தென்றல்
சுமந்து வருவது
செய்தி மட்டுமல்ல
என் கவிதையின் அழகான
பொருளும் நீ தான்



நீயே என் உலகம்
அதில் காத்துக் கிடக்கும்
காதல் கைதி நான்!

உனக்காகவே தினம்
இதயவாசல் திறந்து
காத்துக்கிடக்கின்றேன் - உன்
காதல் எனும்
வார்த்தைக்காகப் பெண்ணே

சொல்லியனுப்பி விடு
சொர்க்க வாசல்
திறக்கும் நாளை
தென்றலிடம்!

பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பட்டாம் பூச்சி



பட்டாம் பூச்சி ஒன்று
பள்ளிக் கூடம் சென்றதாம்
பாடம் பயின்றிடவே ஆனந்தமாய்

செல்லும் போது அறியவில்லை
செல்லப் பாலகன் அதையுமே
சென்று திரும்புகையில் மகிழ்ந்ததாம்

அன்னையவள் அரவணைப்புத் தேடி
ஆசையுடன் ஓடிச் சென்றதாம்
அழகான அந்த சிட்டும்

கயவர்களின் காத்திருப்பு அறியாமல்
கால் நடையாய் சென்ற சிட்டு
கயவர்களின் கண்ணில் பட்டு
கழுத்து நெரித்துக் கொல்லப்பட்ட தாம்

பாவம் அந்த சிட்டும்
பாலகன் என்று அறியாமல்
பாதகன் கொன்று விட்டான்

கண்ணீர் சிந்துகின்றது விழிகள்
கருணையாய் சகோதரியை நினைத்து
கண்டிடுவாய் என் சமூகமே
மீட்டிடுவாய் எம் சிறார்களையே.

பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்பானவள்

அன்பான காதலி
என் நெஞ்சத்தின்
இனிய தேவதை



அழகின் நாயகி
என்வாழ்வின்
சுடர் ஒளி

உனக்காக காத்துள்ளேன்
வந்துவிடு இனியவளே
காதலனாய் காத்துள்ளேன்

கட்டி அணைத்து
முத்தங்கள் தந்திடுவேன்
ஏங்குதம்மா இங்கு
சிறுபிள்ளை மனமும்



பெற்றவளே நீதான்
என் வாழ்வு
கடவுளின் உருவமும்
நீதானே தாயே

பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





காத்திடுவேன் நானும்
உயிராகத் தாயே
கலக்கம் வேண்டாம்

**தியாகம்**

தியாக தீபங்கள்
உருகியே இங்கே
எம் வாழ்வில்
விடியலை தரவே
காத்துக் கிடக்கின்றன
அறியாயோ மானிடமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மங்கையவள் அழகு

மாலைப் பொழுதினிலே
மங்கையவள் அழகினிலே
வீரக்கதிரவனும்
மயங்கும் வேளையில்

செவ்வானம் சிவந்திருக்கக்
கன்னியவள் சிரிப்பினிலே
கதிரவனும் மூழ்கையிலே
கடலலைகள் கூறுதம்மா
காதல் என்ற
செய்தியினை இன்று



எழில் பொங்கும்
அந்தி வேளையிலே
இனிய அழகினிலே
கள்ள மனம்
தினமும் துடிக்குதையா
உணராயோ கண்மணியே

பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



KOHA
JPL

# வியர்வைகளால் புதுயுகம் படைப்போம்.

நெஞ்சே துணிந்து நீயும்
வீர நடைதனைப் போடுகின்றாய்
சிந்தும் வியர்வைத் துளிதனிலே
புதுயுகங்கள் என்றும் படைக்கின்றாய்

உலகை ஆளுந் தொழிலாளி
தினமும் வியர்வை சிந்திடுவாய்
இரத்தம் என்றே நாமும்
அதையே காண மறுக்கின்றோம்

கஷ்டம் என்றும் பாராமல்
இஷ்டப்பட்டு உழைத்திடுவாய்
நித்தம் வியர்வை சிந்திடுவாய்
தொழிலில் வெற்றி கண்டிடுவாய்

உழைக்கும் உங்கள் கைகளிலே
இரத்தம் தினமும் பாயுதையா
அதையும் நீயும் உணராமல்
உழைத்து உலகை உயர்த்துகிறாய்

உணவைப் பற்றி எண்ணாமல்
வியர்வை சிந்தி உழைக்கிறாய்
புதுயுகங்கள் தினம் படைத்திடவே
உடலை வருத்தி உழைக்கிறாய்

*பாரதி மைந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரணம் விடுந் தூது

ஆசையுடனே சிறு பயணம் சென்றவன்
வேகத்துடனே பயணம் தனை விரைவாய்
தொடர
காலனவன் பின்வந்தான் உன்னுடனே

வீதி விதிதனை மதியாமல் நீயும்
விதியின் பிடியினிலே மாட்டிக்கொண்டு
மரணம் எனும் அழைப்பை ஏற்று
வீதியிலே உன் உயிரும் பிரிகிறது

வேகத்தின் பிடியிலே மாட்டிய உயிரும்
வீதியில் தவிர்த்துக் கிடக்கையிலே
கட்டிய மனைவியவள் பிள்ளைகளுடன்
வீட்டினிலே
உன்வரவுக்காய் காத்து நிற்கையிலே

நீ செய்தபிழையினாலே இன்று
நீயும் துடிதுடித்து இறந்துவிட்டாய்
குடும்பத்தின் நிலையினையே அறியாமல்

உணர்ந்திடுவாய் என் சமூகமே நீயும்
வேகத்தின் விளைவினால் குடும்பம் படும்
துயரமான நிலையினையே

பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அழகே

சின்ன சின்னப் பாதத்தால்
மெல்ல நடை போட்டு
என் மனதைப் பறித்தவளே
மஞ்சள் முகத்தழகே
என் மாமன் மகளே



செல்ல மனம் ஏங்குதடி
உன் கள்ளப்பார்வையிலே
காதல் சொல்லத் துடிக்குதடி
காளை என் மனதும்

உன் கள்ளப் புன்னகையிலே
தொலைந்த மனதினையே
தேடுகின்றேன் என்
மாமன் மகளே

உன் மஞ்சள் முகத்தினிலே
சிந்தும் புன்னகையைக்
காதலனாய் ரசிக்க
உன்காதல் வேண்டும்
என் மாமன் மகளே

பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெஞ்சம் எனும் அழகிய
மாளிகைதனில் உன்னை
வைத்துள்ளேன் அன்புடனே
காதல் வார்த்தை கூட
கண்மணியே மாலை சூட
வந்திடுவேன் உன் காதலனாய்



அன்புள்ள காதலனாய்
உன் மச்சான் உனக்காக
காதல் எனும் தோட்டத்திலே
காத்திருக்கேன் தினமுமே
வந்திடுவாய் பூபறிக்க
என் மாமன் மகளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீதி எங்கே

உலகம் எனும் மேடையிலே
சிறப்பாக நாடகம் நடக்குதையா
தினம் பார்க்கப் பொறுக்குதில்லை
இந்த பாவி மனமும்

மனிதனே மனிதத்தை மிதிக்கின்றாய்
இதுதான் உலகத்தின் காட்சியடா
கடவுளைச் சிலர் தேடுகின்றார்
நீதிதனை தினம் அடையவேன
அறியவில்லை அவரும் இங்கு
நீதித்தாய் விற்கப்பட்டாள் என்று

நெஞ்சம் பொறுக்குதில்லை எனக்கு
மனிதம் மறந்த மனிதனைப் பார்க்க
என்ன உலகம் இது
புரியவில்லை எனக்கும் இன்று

உத்தமனும் சிறையில் வாடுகின்றான்
குற்றம் செய்தவனும் வீதியில் ஆடுகின்றான்

*பாரதி மைந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உற்றவரும் கண்ணீரில் மிதக்கையிலே
குற்றம் செய்தவனும் தண்ணீரில்
மிதக்கின்றான்.

பணத்தில் தான் வாழ்க்கை
அதனால் குற்றம் செய்தவனுக்கு
மன்றத்தில் வழங்கப்படுகின்றது
பொய் எனும் நீதி

சட்டம் படித்தவன் பணத்திற்கு அடிமை
குற்றம் செய்தவன் கொடுக்கின்றான் அதனை
வாய்மை வெல்லும் என்றதாய்
அடங்கிக் கிடக்கின்றாள் இன்றுமே

இது தான் நீதியா
இல்லை இதுதான் வாழ்க்கையா
நெஞ்சம் பொறுக்குதில்லையே
விழித்திடு என் இனமே
நீதியைக் காண்பதற்கே

பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தனிமை

ஆயிராங் கவலைகள்
சின்னச் சின்ன சந்தோஷம்
வாழ்க்கை எனும் பாதையிலே



ஆயிரம் உறவுகள்
அன்பான நட்புக்கள்
அனைத்துமே இன்று
எனக்குத் தனிமையைத்
தந்தனவே அழகாக

தனிமையின் கொடுமையைக்
கண்ணீருடன் இரசிக்கின்றேன்
அதுவும் தனிச்சுகம் என்று
அடடா என்ன ஒரு இனிமை

தனிமையின் காதலனாய்
கண்ணீரே நண்பனாய்
வாழ்க்கையே போகுதடா

பாறதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஒன்றாய் இருக்கின்றேன்
மகிழ்வாய்க் குடும்பத்துடன்
மனம் மட்டும் ஏனோ
தனிமையைக் காதலிக்கிறது

தனிமையும் என்
இனிய தோழன் ஆனதுவே
தனிமைதான் என்
வாழ்க்கையும் ஆனதுவே

**துரோகம்**

கட்டிய மனைவி
கொல்லி வைக்க துணிகிறாள்
கள்ளக்காதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனிதத்தைச் சிந்தியுங்கள்

**பி**ச்சைப் பாத்திரம்
சிறு கைகளில்
அறியாயோ மானிடமே
நாளைய தலைமுறையின்
நிலைதனை என்றும்



காமத்தின் பசியால்
நீ கொண்ட மோகம்
இன்று வீதியிலே
பிச்சைப் பாத்திரத்துடன்
யாரும் இன்றித் தவிக்கின்றது
பிஞ்சு மனங்கள்

நாளைய தலைமுறை
இன்று வீதியிலே
காமப்பசி தீர்த்த
உங்கள் உணர்வுகள் இன்று
சிறு பிள்ளையாய் வீதியிலே

*பாரதி மைந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தவிப்பது நீங்களா
இல்லை சிறுமனமா
காமத்தின் பரிசான
குழந்தைகள் இன்று
வீதியில் கவலையுடனே
தினம் தவிக்கையிலே
உணர்வை தீர்த்த நீங்கள்
ஆடம்பரமாய் வீட்டினிலே



போதும் நிறுத்துங்கள்
உணர்வை மதிப்பதை
முதலில் மனிதத்தை
சிந்தித்து வாழுங்கள்
உலகில் நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்காக மரித்த உத்தமன்

உலகத்தின் பாவத்தை
தனதாக எண்ணியே
என் தேவன் யேசு
உயிரைக் கூட
தந்தாரே எனக்காய்



சிலுவை மரத்துடன்
தள்ளாடி தரை வீழ்ந்து
வீர நடையுடனே
என் பாவங்கள் சுமந்து
சிலுவையில் மரித்த
உத்தமன் என்பிரான்

எனக்காய் மரித்த உத்தமன்
என்பாவத்தை அன்புடனே
ஏற்றுச் சிலுவையில் மரிந்த
வேளையிலே ஆராதிக்கிறேன்

பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலத்தின் தாண்டவம்

**கா**லத்தின் தாண்டவத்தில்
ஆடுதையா மனித வாழ்க்கை
புரியாத புதிராக இன்றும்



அன்பை அறியாது
காலையில் வேலை
மாலையில் வீடு
இது தான் இன்றைய
காலத்தின் கோலம்

உணவிற்காய் உழைக்கும்
மனிதன் இன்று
பணத்திற்காய் உழைப்பதுதான்
காலத்தின் தாண்டவம்



பாசத்தைப் பணத்திற்காய்
மனதினிலே பூட்டி
மனிதம் போடும்
நாடகம் தான் காலம்

*பாரதி மைந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காலத்தை அளப்பவன் நீ
இன்று காலம் அளக்கிறது
மனிதா உன்னை
வெற்றிகொள்
காலம் உன்கையில்
வீறு நடைபோடு
பாசத்துடன் காலத்தின்
தாண்டவத்தை நிறுத்து



**எமது தேடல்**

கடந்த பாதைகளை
கண்ணில் சுமந்தே
கண்ணுறங்காது விரைகின்றேன்
எமது தேடலிடமே

பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என் பயணம்

தமிழில் நான் கொண்ட காதல்
என்னை உங்களுக்கு இன்று காட்டியது
உணர்வுகளின் பாதை எனும் படைப்புகளுடாக

இன்று மீண்டும் உங்கள் உறவாக
வந்துள்ளேன் அடுத்த படைப்பினூடாக
தமிழினால் உங்களை நனைக்கவே

கவிஎனும் ஆயுதம் கொண்டு
சமூகத்தை மாற்ற எண்ணியே
என் பயணம் தொடங்கினேன்



இன்று உங்களின் ஒருவனாக
அனைவரும் பார்க்க உள்ளேன்
அன்பு உறவாகவே நான்

என்பயணம் தொடரும்
தமிழின் காதலனாக என்றும்
பாசத்துடன் வாழ்வேன் நானும்
உங்கள் அன்புடனே தினமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



KOHA JPL

# தமிழன்

தமிழரின் வாழ்வியலைத்
தன்னகத்தே கொண்ட
தமிழன் ஆண்ட
எங்கள் பூமி



தமிழை மறந்து
நம்மவர் போடும்
நாகரீக ஆட்டம்
இன்று பூமியிலே

அரை குறை ஆடைகளுடன்
மானத்தை மறந்து நீங்கள்
நாகரீகத்தில் உங்களையே விற்கும்
கொடுமையான காலம் இது



தமிழராய்ப் பிறந்து
தமிழராய் வளர்ந்து
இன்று தமிழை
வெட்கமென நினைத்து

பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆங்கிலத்தில் மோகம் கொண்ட
நாகரீக காலம் இது
தமிழனே உன் பண்பாடு
கலாசாரம் அனைத்தும் எங்கே
ஈழப்போரில் அழிந்து விட்டதுவோ?



தமிழா உலகத்திலே
முதல் தோன்றிய
வீர இனமடா
வெட்கம் வேண்டாம்
மார் தட்டிக் கூறிவிடு
தமிழன் என்று

விழித்து எழு
நாகரீகத்தை தூக்கி எறி
தமிழர் பண்பாடு வளர்த்து
தமிழ் மகனாய், மகளாய்
பூமியிலே வாழுவோம்
வாருங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நட்பு



உறவுகள் பல
என் வாழ்வினிலே
வந்து போனாலும்
என் உயிராக
தினம் வரும்
அன்பு உறவு
என் நண்பர்களே

ஆபத்து வேளையிலே
தோள் கொடுத்தே
என்னைக் காத்திடுவான்
அன்னையின் அன்பை
தினமும் தந்தே
பாசமாகக் காத்திடுவான்



உலகம் போற்ற
என்னை உயர்த்த
தினமும் உழைக்கும்
உயிருள்ள உறவு
என் நட்பு

*பாரதி மைந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என் வாழ்க்கை

கண்கள் சிந்துகின்றது கண்ணீர்
மழையினையே
வாழ்வின் நிலையை எண்ணியே
கழிக்கின்ற காலம் எல்லாம் என்னை
வேதனையில்  வாட்டி வதைக்கிறதே

சாதிக்க எண்ணியே பாடசாலை சென்றேன்
சின்னச் சிட்டாகவே அன்று நான்
காலங்கள் தினம் ஓடிச்சென்றதுவே
சாதனையின் உச்சியிலே நின்றேன் நானும்
என்னுடைய ஆசான்களின் அன்பினாலே
என்றும்

பொறாமை எனும் ஆயுதம் கொண்டே
தாக்கியது சில நட்பு வட்டாரங்கள்
உடைந்தது என் இலட்சியக் கனவு
மகிழ்ந்தது அழிக்க எண்ணிய வட்டாரமும்

வினை கொண்டு தாக்கிய கூட்டம்
என்வீழ்ச்சியிலே  மகிழ்ந்ததுவே

பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்னுடைய மனமும் வேதனையில் வாடியதே
யார் அறிவார் என் நிலையை

இன்றும் கண்ணீரில் தினம் வாடுகின்றேன்
என்னுடைய பாடசாலை வாழ்வை எண்ணியே!
என்ன வாழ்க்கை என்றே நினைத்தே
எனது வாழ்க்கையையும் இன்று தொடர்கின்றது

பல்வேறு தடைகள் என்னை அழிக்கவே
இருந்தும் தொடருகின்றேன் என்வாழ்வை
கவியின் பயணத்துடனே தடைகளைத் தாண்டி

என்வாழ்க்கை கண்ணீரில் தினம்
என்னை என்றும் வாட்டிப் போடுகின்றது
ஆனாலும் மகிழ்கின்றேன் சில உறவுகளால்

என் பயணம் தினம் தொடரும்
கண்ணீரில் மனம் நனைந்து வாழ
முகம் மட்டும் சிரித்து வாழும்
அது போதும் எனக்கு வாழ்வில்
என்னால் மகிழட்டும் உறவுகளும்.

பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுமைதாங்கி

குண்டு மழை பொழிந்த காலம்
உறவுகள் சூழ ஓடினேன் நானும்
கணவனின் உயிர் துடித்து போகையிலும்
பிள்ளைகள் உயிரைக் காக்க ஓடினேன்

இன்று பிள்ளைகளை உயர்த்த வென்று தினமும்
சுமை தாங்கியாக வாழ்கின்றேன் நானும்
அல்லும், பகலும் பார்க்காமல் நித்தம்
என்னையே உருக்குகின்றேன் பிள்ளைகளின்
விடியலுக்காக

கணவன் இல்லை என்பதால் நானும்
விதவை தான் வாழ்வில்
ஊரார் சொல்லுகின்றனர் புதிய பெயர்
விபச்சாரி என்றே தினமும் இங்கு

பெண்ணாக நானும் சுமையைத் தாங்குகிறேன்
என்நிலை அறியாத சமூகம்
எனக்கு பல பெயர்களைத் தருகின்றது

அதையும் தாங்கியே என் வாழ்க்கை
பிள்ளைகளின் நலனுக்காக ஓடிச்செல்கின்றது
சுமைதாங்கி வாழ்வாகவே தினமும்

*பாரதி மைந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாயே

அன்பு எனும் தெய்வம்
ஆசையாய் அணைத்த கடவுள்
உன்னையே தினம் ஆராதிக்கின்றேன்
உன்பிள்ளை நானும்

முத்தங்கள் தினம் இட்டுக்
கட்டியே அணைத்தேன் (எ)ன்னை
கவலைகள் என்றவுடனே தாயே
உன் மடியினில் சாய்ந்தேன்

நீ கூறும் வார்த்தையிலே
கவலைகள் தினம் மறந்து
என்னையே இழந்து விட்டேன் தாயே



அன்பு என்ற சொல்லின்
இலக்கணமாய் நீயும் உண்டு
அதுவே போதும் தாயே

தடைகள் வந்தாலும் எனக்கு
கவலை இல்லை தாயே
நீ இருந்தால் போதும்
தடைகளை தகர்ப்பேன் நானும்.

பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாடகம்

தொலைக்காட்சி நாடகமாம்
வாழ்க்கையில் தாண்டவமாம்
குடும்பம் என்ற நந்தவனம்
சிதைந்தே இங்கு நிற்கின்றது



நாடகத்தின் காட்சி எல்லாம்
இங்கு வீட்டினிலே நடக்கின்றது
பிள்ளைகள் படிப்பு தினம்
நடிப்பாக எங்கோ போகின்றது

நாடகத்தில் வந்த வில்லி
வீட்டில் வந்து நிற்கின்றாள்
இதையே இன்று சமூகம்
பெருமையாகத் தினம் புகழ்கின்றது



வெட்டுக் கொத்து காட்சி
நாடகத்தில் தினமும் நடக்கின்றது
அதையே எம் சமூகம்
பற்றி இன்று பிடித்துள்ளது

*பாரதி மைந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்ன ஒரு நாடகமாம்
புரியவில்லை வாழ்வினிலே
உணர்ந்து நீங்கள் இன்று
திருந்த மறந்து விட்டால்
சமூகம் அழியும் கண்டிடுங்கள்

**ஈழக் கனவு**

ஈழக் கனவுடன
நித்தம் நடக்கிறேன்
ஈழ மகனாய்
எம் உறவுகளை
மண்ணில் விதைத்துவிட்டே
கண்களில் வீரம்
கொண்டே நடக்குறேன்
ஈழம் காக்கும்
கனவுடனே இன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்பின் வீடு

அழகான நந்தவனம்
உயிருள்ள உறவுகளின்
சங்கமத்தின் புகலிடம்

கடவுள் வாழும்
உன்னத உறைவிடம்
என் வாழ்க்கை தொடங்கிய
அன்பு வாழுமிடம்



தனிக்குடும்பம்
என்ற வாழ்வை
என்றுமே அறியாத
கூட்டுக்குடும்பம்
எங்கள் வீடு

இறைவன் தேடிவந்து
எம் அன்பை பெற
துடிக்கும் உன்னத
அன்பின் வீடு

*பாரதி மைந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசத்தில் இணைந்தே
மனங்களை வெல்லும்
உறவுகள் வாழும்
உன்னத வீடு



வாருங்கள் நீங்களும்
இணையலாம் அன்பாக
எம் நந்தவன வீட்டில்

**காத்திடு**

இளமை கடந்த நானும் இன்று
வயோதிபத்தின் கடைசி நொடியில் சிக்கியே
உதவிக்கு உன்னை அழைத்திட்டேன் துணையாகவே
வந்து என்னைக் காத்திடுவாய் தினமுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வியின் மகத்துவம்

கல்வியின் நிலையினை
உணர்த்திடுவாய் சமூகமே
கல்வியால் வாழ்வுதனை
உயர்த்திடுவாய் தினமுமே



இன்றைய தலைமுறையிடம்
வாசிக்கும் பழக்கமில்லை
இதனாலே தாழ்ந்தது
எமது கல்வித் தரமும்

எழுத்தறிவித்த கடவுளை
தினம் மதித்தே
நடந்த காலம் போய்
எழுத்தறிவித்தவனை தூற்றிடுதே
எம்மாணவ சமூகமும்



கல்வியின் மகத்துவத்தை
நீயும் உணர்ந்தே
சிறப்பாய் கற்றிடுவாய்

*பாரதி மைந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாசிப்பை வளர்த்தே
ஆசானையும் மதித்திடுவாய்
உன் வாழ்க்கையைத்
தினம் உயர்த்திடுவாய்
சமூகத்திலும் கல்விமான்களைத்
தினமும் பெருக்கிடுவாய்



## அம்மா

அம்மா என்றே
என்னை அழைக்க
பிள்ளை இல்லா
உறவானேன் நானும்
ஏன் இந்த
கொடுமை என்றே
தினமும் சிந்துகிறேன்
கண்ணீர்த் துளிகளையே

பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எங்கு சென்றாய்

காதலியே காதலித்தேன்
உயிராக உன்னை
நீ மட்டும் ஏனோ
என்னைப் புரியவில்லை



உன் நினைவுடனே
தினமும் வாழ்கின்றேன்
வலிகளைச் சுமந்தே

தேவதையே இன்றும்
உன்னையே காதலிக்கின்றேன்
எங்கு சென்றாய் நீயும்

அன்பே உன்னுடனே
நடை பயின்ற
காலங்கள் தினமும்
கண் முன்னே
வந்தே செல்கிறது

கண்ணீரை இன்று
காதலித்து வாழ்கின்றேன்
உன் நினைவுகளுடனே!

*பாரதி மைந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்ப வலிகள்

இன்பம் தருகின்றது
உன் நினைவுகள்
ஆனாலும் இன்று வலிக்கிறது
உன்னுடைய பிரிவின்
வலிகள் வாழ்வில்

கல்லூரிக் காலத்திலே
ஒன்றாக திரிந்த
ஞாபகங்கள் தினமும்
வந்தே செல்கின்றது



துள்ளித்திரிந்த
அந்த நாட்கள்
உன் நினைவுகளாய்
என் மனதினிலே
நித்தம் வந்து
என்னைக் கொல்கிறது

தோழியே உனது
நினைவுகளின் இனிமை
இன்று வலிக்கிறது
நீ இல்லாத பொழுதிலே

*பாரதி மைந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நண்பனாகக் காத்துள்ளேன்
தோழியே வந்துவிடு
உன் தோழனய்
நான் உள்ளேன்
இன்ப நினைவில்
வலிகளைச் சுமந்தே



எது சுதந்திரம்... ?

இனிய தேசம்
இனிமையான காலம்
எங்கும் சுதந்திரம்
எல்லாம் பேச்சிலே

அடிமையாய்த் தினம்
வாழ்கிறோம் என்றே
நாமும் உணராமல்
கூறுகின்றோம் சுதந்திரமென்றே

பாரதி மைந்தன்



265033
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மது போதை

மது என்ற போதையிலே
உன் நிலை மறந்தே
குடும்பத்தில் நீயும் போடுகின்றாய்
உன்னை அறியாமல் தாண்டவம்

இனிமையாய் மகிழ்ந்த குடும்பம்
இன்று கண்ணீரில் மிதக்கின்றது
உன் நிலையை நீ மறந்ததினால்



கல்வி கற்கும் பிள்ளை
உன் கோலம் கண்டு
கல்விதனை இன்றும் மறக்கிறது
உணருவாயா நீயும் வாழ்வில்

உன் குடும்ப வாழ்வை
தினமும் நீயும் அழிக்கின்றாய்
இதை உணர்ந்து வாழ்வில்
திருந்த வேண்டும் என்றும்

குடும்ப வாழ்வை மகிழ்வுடனே
தினமும் கழித்து நீயும்
உன் வாழ்வைகாக்க வேண்டும்

*பாரதி மைந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மதுவின் பிடியில் சிக்கி நீயும்
வாழ்வை அழிப்பதும் சரியா
இனியும் வாழ்வை உணர்ந்தே
மதுவை விட்டு விடுவாய்



தமிழ்

மேகங்கள் திரண்டிங்கே
வெண்ணிலவை அழைத்திடவே
பூங்குயிலும் சித்துபாடி
தமிழ் நிலவை
தட்டி எழுப்பிடவே
அன்பு மேகங்களாய்
திரண்டே நடக்கிறது
தமிழின் திருவிழாவாம்

பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பசுமைப் புரட்சி

இயற்கைத் தாயின் பிள்ளைகளாய்
அன்புடனே காக்க ஏந்திடுவோம்
பசுமை காக்கும் புரட்சி தனை

பெற்ற தாய் போல்
காத்திடுவோம் தாயே
உன் அழகிய கொடைகளை



உன்னை அழித்திடும்
மாந்தர் மனம் மாற்றி
வளர்ப்போம் மரங்கள்தனை

பசுமைப் புரட்சிதனை
வாழ்வாய் எடுத்தே
நித்தம் காத்திடுவோம்
எம் சமூகம்தனை.



இணைந்த கைகளால்
என்றும் காப்போம்
இயற்கையின் வளங்களையே.

பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஏங்கும் மனம்

வீதியிலே செல்லும் பிள்ளை
விருப்புடனே கண்ட காட்சி
வெள்ளை உடையுடனே இங்கு
வேகமாய் செல்லும் பிள்ளைகளை



கல்விச் சுடரினை ஏற்றிடவே
கல்வி மான்கள் செல்கையிலே
சின்னப்பிள்ளை மனமும்
சிந்திக்க தொடங்கிவிட்டதையா

வறுமை எம்மை வாட்டுதையா
வயிறும் காய்ந்து போகுதையா
பாவப்பட்ட என் வாழ்வினிலே
படிக்க வழியும் இல்லையையா!



கல்வி கற்க நானும்
காத்து இங்கு இருக்க
உதவ இன்று எனக்கு
உறவுயாரும் இல்லை

*பாரதி மைந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



KOHA-
JPL

ஏழை என்றே என்னை
எட்டி உலகம் தள்ள
ஏங்குதிந்தச் சின்ன மனமும்
ஏட்டுக் கல்வி தொடங்க



பணம் என்ற ஒன்றை
பற்றிப் பிடிக்கும் மனிதன்
தவிக்கும் எந்தன் உள்ளம்
தினம் கண்டு கொள்ளவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயற்கைத் தாய்

அன்னை வளத்தினையே நாமும்
அன்புடனே காத்திடுவோம் தினமும்
எல்லையில்லாப் பாசம் தந்தே
எம் உயிர்காத்திடும்
எழிலான இயற்கையை காத்திடுவோம்

சுவாசித்து வாழ தினம்
சுத்தமான காற்றைத் தந்து
அன்பாக எம்மை காக்கும்
அன்னை வளத்தினையே காத்திடுவோம்



உன்னை தினம் அழிக்கும்
உயிருள்ள மனிதனுக்குத் தினம்
உணரவைப்போம் நாமும்
உன் மகத்துவச் சேவையினை

அன்னை வளமே உன்னை
ஆசையாய் என்றும் அணைத்தே
அன்புடன் உலகில் வாழ
எடுத்திடுவோம் பசுமைப் புரட்சிதனை

பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்வியல்

கவிதை எழுந்திடவே தினம்
காகிதம் தேடினேன் நானும்
கவலையான என் மனதினையே
கருவாகத் தினம் தந்திடவே



சமூக நாகரீகம் என்ற
சாக்கடையில் தவிப்பது கண்டு
ஆசை மகன் நானும்
அழுகின்றேன் தினம் இங்கு

வரிகளில் நானும் வரைந்தேன்
வாழ்வியல் பாதைகளை நித்தம்
நாகரீக மோகம்கொண்டே
நாட்டியம் போடுது உலகம்

புரியவில்லை எனக்கும் இன்று
புதிராக உள்ளது வாழ்வும்
தமிழர் எங்கள் வாழ்வு
தெரியாமல் வாழ்வது சரியோ?

பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



KOHA

உணருங்கள் எம் சமூகமே
உயிரான உங்கள் வாழ்வியலை
காத்திடுவோம் தினம் நாமும்
கற்பு உள்ள வாழ்வியலை
காட்டிடுவோம் என்றும் நாங்கள்
தமிழன் நாம் என்றே.



**உனக்காக...**

உனக்காக வாழ்ந்த
ஜீவனும் இன்று
என்னிடம் இல்லை

உன் வரவுக்காய்
காத்தே கிடந்து
என்னை விட்டு
செல்ல ஆயத்தமாகிறது
இன்று அதுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சந்தோசம்

கான மழை இசைத்துவிட்டால்
மாந்தர் மனம் குதூகலிக்கும்
கவிமழையை உதிர்த்து விட்டால்
கவிஞன் மனம் சிறகடிக்கும்
காதல் மனம் இணைந்துவிட்டால்
காதல் உள்ளம் மகிழ்ந்திருக்கும்
வான மழை பெய்து விட்டால்
மாநிலமே குதூகலிக்கும்.



**காதல்**

காதலில் சங்கமம்
உன் நினைவுகளிலே
நித்தம் என்னை அழைத்தது
காதல் கொண்டேன்
உன் மனம் எனும் கோவிலில்
வர வேண்டும் அழைப்பாயா?

பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளமை

இளமைக்காலம் எல்லாம்
இனிமை என்ற பெயரிலே
புதைந்து இங்கே கிடக்கும்



தன்னை மறந்தே இங்கு
தாண்டவம் போடுது இளமை
நாகரீக மோகம் என்றே
நாட்களை கழிக்குது வீணாய்

வாழ்க்கை என்ற ஒன்றை
வாழ நீயும் எண்ணி
உன்னை நீயும் இழந்து
உழைப்பு என்றே தினம்
உறவை இழப்பது சரியோ?



பணம் என்ற மோகத்தில்
பாசம் கொண்ட உறவை
தவிக்கவிட்டு நீயும்
தனித்துப் போவதும் சரியோ?

நாகரீக புதைகுழியில் நீயும்
நன்மை என்றே எண்ணி
வாழ்வை புதைத்து நீயும்
வாழ்க்கை இழப்பதை உணரு

*பாரதி மைந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துளிர்விடும் கனவுகள்

சமூகத்தின் விம்பங்களை
வரைகிறேன் நானும்
துளிர்விடும் கனவுகளாய்

அழியும் எம் கலாசாரம்
மீண்டும் தலை தூக்குமென்று
ஒரு கனவு மனதில்
நித்தம் துளிர் விடுகின்றது



விடியலின் வாழ்வு
தமிழர் எமக்கு
ஈழத்தைத் தந்தாய்
துளிவிடுகின்றது
என் எண்ணங்கள்

நான் தீட்டும்
துளிர் விடும்
கனவுகளின் வரிகள்
விடியலாகும் விரைவில்
துளிர்விடும் கனவுகள்

பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





விருட்சமாகும் காலங்கள்
அருகினில் வருகின்றன

ஈழம் என்ற நாடு
விரைவில் கையில் வரும்
கலக்கம் வேண்டாம் உறவுகளே
துளிர்விடும் கனவுகள்
ஈழத்தைத் தினமும் தந்துவிடும்

**கோடைக்காலம்**

வண்ண மலர்கள்
பூத்துக் குலுங்குகின்றன
கோடைக் காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிராமம்

அழகிய கிராமத்தின்
மனமகிழ் அரங்கேற்றம்
காணவே மனிதத்தின்
மனமது துடிக்கிறதே



நீரோடை நீரலையில்
இயற்கை விம்பங்கள்
நயமுடன் நர்த்தனம்
இயல்பதாய் ஆடுகின்றதே

ஆனந்தக் கூத்தாடும்
நீரோடைப் பறவைகளும்
இணைந்துமே அழகதாய்த்
குளியல்கள் போடுகிறதே



தென்னை மரச்சோலையின்
தென்றல் காற்றிலும்
அறியாமல் உள்ளமும்
கொள்ளை போகின்றதே

*பாரதி மைந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வைரமுத்து

தமிழுக்குச் சிகரமாய்
தமிழனின் கவிஞராய்
நித்தம் வாழ்பவரே

உந்தன் வரிகளின்
வீரத்திலே தெரிகிறது
உந்தன் பெயரில்
உள்ள வைரம்



கவி என்னும்
அழகான வரிகளால்
மக்கள் மனம்
வென்றவர் நீரே

வைரமுத்து என்ற
கிராமத்தின் மைந்தனாய்
இன்று உலகத்தின்
மைந்தனாக வந்தீர்
தமிழ் நாட்டில்
நீரும் பிறந்ததினால்

பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ் நாடே
மகிழ்கின்றது இன்று
உம்மால் தனக்கு
புகழ் என்றே



வைரமான உந்தன்
அழகான வரிகள்
எதிர் பார்த்தே
காத்துள்ளோம் தினமுமே

வரையும் வரிகளில்
அழகைக் கூட்டியே
எம்மை மயக்கும்
எழுத்தின் மன்னவன்
நீர்தானே.

3 10 2018

பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதுதான் உலகம்

புத்தகப் பையுடனே
வீதியிலே போகையிலே
விஞ்ஞானி என்றவர்கள்

காலங்கள் போகையிலே
அழகான வாயாலே
முட்டாளும் என்றார்கள்

கல்வியில் கரையையே
நானும் தாண்டவில்லை
பட்டங்கள் பலவே
ஊரில் பெறுகின்றேன்



பரீட்சையிலே நானும்
வெற்றியிங்கு கண்டவுடன்
மௌனித்த ஊரும்

புள்ளியிலே குறைந்தவுடன்
பத்திரிகை செய்தியாக
பரவிக் கிடக்கிறதே

இதுதான் உலகமென்றே
கடக்கிறேன் நானும்
இனிமையான வாழ்க்கையையே

*பாரதி மைந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்லூரிக்காதல்

கல்லூரிக் காலத்திலே
என்னவளின் அழகினிலே
என்னையே மறந்த
இன்பமான நினைவுகள்
நெஞ்சில் வருகிறது



மேசை மீதினிலே
அவளின் பெயர்களைக்
கிறுக்கிய பொழுதினிலே
என்னையே மறந்தேன்

அவள் பார்வையினால்
என்னைக் கட்டியே
இதயச் சிறையினிலே
பூட்டிய காலமும்



இனிய இன்பமே
இன்றும் அவளின்
அழகிய ஞாபகங்களை
மனதினிலே சுமந்து
செல்கிறேன் நானும்
வாழ்க்கைப் பாதையிலே

பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணம்

பணம் என்ற மோகத்திலே
ஆடுகின்ற நீயும் இங்கே
உணவின்றித் தவிக்கின்ற எம்மவர்
நிலை தனையே நீயும் உணராயோ?

வீதியினை வீடேன்றே தினமும்
எண்ணி இங்கே வாழ்க்கையிலே
மாளிகையில் வாழும் நீயும்
பிச்சைக்காரன் என்றே என்னை
தள்ளிவிட்டு சென்றதேனோ சொல்



வாழ்க்கை எனும் பாதையிலே
காலம் எல்லாம் மாறுமடா
என் வீடும் மாளிகையாகும்
உன் வீடும் வீதியாகும்
அன்று நான் அழைப்பேன்
உன்னையும் தோழன் என்றே

உணவிற்காய் வந்த என்னை
எட்டி நீயும் உதைத்தாய்
உலகம் உன்னை வணங்கு மென்றே

*பாரதி மைந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பணத்தை மதித்து வாழ்ந்தாய்
மனிதம் மறந்த மனிதா
மண்ணாய் நீயும் போனால்
பணமா வந்து தூக்கும்
அதையே உணர்ந்து நீயும்
உலகை மதித்துவாழு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏங்கே

தேடுகின்றேன் வாழ்வில்
கிடைக்கும் என்றே
தேடல் அதிகரித்தே
சுமையாய்ப் போனதே



எத்திக்குச் சென்றாலும்
காதிற் கேட்பது
தேடலின் கதைகளே

வாழ்க்கையைப் புரட்டியும்
தேடுகின்றேன் நானும்
விரைவில் கிடைக்குமென்றே
காணவில்லை இங்கே



நான் நானாகவே
வாழ்வை நடாத்திடவே
தேடுகின்றேன் வாழ்வினிலே
அங்கேயும் காணவில்லை

பாரதி மைந்தன்



265033

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எம்மவர் வாழ்வினிலே
தினமும் கண்டதை
நானும் தேடுகின்றேன்
புரியாத புதிராக
எங்குசென்றதோ
எனக்கும் புரியவில்லை

கண்ணீருடனே தேடுகிறேன்
என்னுடன் இருந்த
சுகந்திர காற்றையே



எங்கு சென்றதோ
புரியவில்லை எனக்கும்
அடிமையாய் வாழ்கிறேன்
மண்ணையும் இழந்தே

எப்போது வருவாய்
சொல்லிவிடு நீயும்
சுவாசிக்கக் காத்துள்ளேன்
தமிழ்மகவாய் நானும்

பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்வு தேடும் நெஞ்சங்கள்

வாழ்க்கை எனும் பாதையிலே
வாழ்வைத் தினம் தொலைத்திங்கே
வாடி நானும் நிற்கின்றேன்
வாழ வழியின்றி உலகினிலே



காமப் பசி தீர்த்த
காளையவன் விட்டுச் சென்றிடவே
கன்னியவள் தினம் வாடியிங்கே
கருவான என்னை பெற்றெடுத்தே

வீதியிலே என்னை வீசிடவே
விதியின் பிடியினிலே சிக்கியிங்கே
விரட்டி விடப்பட்டேன் அனாதையென்றே

விரைந்து போகும் காலத்திலே
அடிமையாகி நானும் இங்கே
நெஞ்சத்தால் தேடுகின்றேன் வாழ்க்கையையே

பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெற்றவளும் இல்லை இங்கே
உற்றவரும் தெரியாத நிலையினிலே
வாழ்வை தினம் தொலைத்திங்கே
நெஞ்சத்தால் தேடுகின்றேன் வாழ்க்கையினை



அனாதை என்ற பெயருடனே
கழிகின்ற என் வாழ்வில்
கண்ணீரில் நான் தவிக்க
ஆறுதல் சொல்ல யாருமில்லை



ஊரார் வெறுத்து என்னை
தினம் இங்கு தள்ள
யாரும் இல்லா உறவாக
என் வாழ்வு செல்ல

அனாதை என்ற பெயருடனே
தேடுகின்றேன் என் வாழ்வை
பாதை இல்லா வழியினிலே

பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புலம்பல்

**கா**த்திருக்கின்றேன் தினமுமே
உன் வரவிற்காய்
உடனே வந்துவிடு



ஏழை நானும்
நீ வருவாயென்றே
உனக்காய் காத்திருக்கின்றேன
என்னை விட்டு
எங்கே சென்று விட்டாய்



வயல் நிலங்கள்
காய்ந்தே கிடக்கிறது
எம் வயிறும்
வாடியே போகிறது
வந்துவிடு நீயும்
வறுமை போக்கவே

உன்னை நம்பி
கடனும் பட்டேன்
இன்று வட்டி வளரும்
என்றே தினம்
உயிரையும் இழக்கின்றேன்

*பாரதி மைந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இறுதியாய் சொல்கின்றேன்
வந்துவிடு மழையே
இல்லையெனில் சொல்லிவிடு
எம் வாழ்வையே
உரமாக்குகின்றோம் நாமும்
விதை நிலத்துக்கே!

**இரவுகளைக் காதலிக்கிறேன்**

இரவுகளைக் காதலிக்கிறேன்
நானும் இங்கே
அவளின் நினைவுகள்
என்னில் வந்தே
நித்தம் செல்வதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காதலிக்கின்றேன்

உன்னைக் காதலிக்கின்றேன்
உயிராகவே நானும்
அன்னையவள் அன்பைவிட
காதல் கொண்டேன்
உன்னில் நானும்



வீரம் நிறைந்த
வாழ்க்கையிலே நானுமிங்கு
கண்ணீருடனே காதலிக்கின்றேன்
உன்னைத் தான் அறியாயோ



உனக்காக நானும்
உயிரையும் தந்திடுவேன்
என் வாழ்வினிலே
ஆனாலும் இன்று
வரிகளையே தருகின்றேன்
உனக்காக இங்கு

பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



KOHA
JPL

ஈழ பூமியே
காதலன் நானுமிங்கு
உனக்காக காத்துள்ளேன்
அடிமை விலங்குடைத்தே
என்னிடம் வந்துவிடு
முத்தங்கள் இடுகின்றேன்
உன் காதலனாய்
தினமும் நானுமே



வந்துவிடு என்னிடமே
உன் சுதந்திர வரவுக்காய்
காத்துள்ளேன் நானுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முல்லைமண்

**க**ண்ணகி அம்மன்
குடியிருக்கும் பூமியம்மா
அருள் வரங்கள்
நிறைந்த எங்கள்
முல்லை மண்ணம்மா



வீரத்தின் வித்துக்கள்
விதைக்கப்பட்ட எங்கள்
விடியலின் நிலமம்மா
இரத்தம் சிந்திய
வீரதேசமம்மா

வளங்கள் நிறைந்த
நந்திக் கடலைக் கொண்ட
இயற்கை வளமிக்க
அழகிய பூமியம்மா

*பாரதி மைந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இறால் வளமும்
தென்னை வளமும்
தன்னகத்தே கொண்ட
எழில் நிறைந்த
அழகிய இடமம்மா



தமிழுக்காய் உயிரை
விரும்பியே கொடுத்த
எம்மவர் வாழ்ந்த
வீரத்தின் நிலமம்மா
எங்கள் தாயான
முல்லை மண்ணம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புரிதல்

இரு மனங்கள்
இணைந்தே இங்கு
திருமணம் ஆனதே

இறைவனின் படைப்பினில்
புனிதமும் ஆனதே
இல்லற வாழ்வினில்
நல்லறம் காணவே



இணைந்திட்ட இருமனமும்
புரிதல் இன்றியே
தனிமையையும் இரசித்தே
கொடுமையுடன் வாழுதே

விவாகரத்து என்று
திரியும் கூட்டமும்
இதனால் கூடுதே

பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இரு மனமும்
இணைந்த திருமணத்தில்
பிரிவு என்றால்
ஏன் இந்த திருமணமும்

இணைந்தால் புரிந்து
நடத்துங்கள் வாழ்வை
இல்லையேல் நீங்களும்
சிந்தித்தே தனிமையாய்
வாழ்வை நடத்துங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஏமாற்று அரசியல்

ஓட்டுப் போட்டோம்
தமிழைக் காக்க
ஒதுக்கி வைக்கின்றாய்
புகழைக் காக்க



ஓட்டுக் கேட்க
வேசம் போட்டு
மக்கள் மனதைத்
தமிழ் என்றே
கலைக்கும் மூடர்களே

தமிழ் என்ற
உணர்வைத் தீண்டியே
இன்று எங்கள்
உணர்வுடனே விளையாடுகின்றாய்
உன் புகழைத்
தினம் காத்திடவே

பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உங்கள் புகழை
உயர்த்த நீங்கள்
உங்களுக்குள் சண்டையிட்டு
எம் உணர்வுகளை
அவமானப் படுத்துகிறாய்



அரசியற் பேய்களே
ஆடம்பரமாய் வாழ
தமிழையே அழிக்கிறாய்
இன்று நீயும்

தமிழினமே! உன்னை
அரசியல் என்ற
பெயரை கொண்டே
ஏமாற்றும் மூடர்களை
கண்டும் ஏன்
பொறுமை காக்கின்றாய்



ஆட்சி என்றே
பணத்தை உழைத்து
வாழும் பேய்களே
தமிழ் உணர்வை
மிதிக்காதே

பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதி

இருமனம் இணையும்
திருமணத்தில் இங்கே
வாழ்வது இருவருமா
இல்லையேல் சாதியா



சாதி என்ற
பெயரை சொல்லி
சாக்கடையில் நீயும்
வாழ்வை நடாத்தவா
புறப்படுகின்றாய் இங்கே

வாழ்வை நடத்துவது
யார் என்றே
நீயும் கூறிவிடு

சாதி என்றே
அலையும் மூடனே
உடையிற் பார்
உன்னுடைய சாதியை
உடையின்றித் தான்

பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அலைவாய் நீயும்
சாதி என்றா
திரிகின்றாய் நீயும்
உணவில் பார்
சாதியை நீயும்
பட்டினியாய்த் தான்
இங்கே அலைவாய்



மூடனே திருந்திடு
சாதி என்று
அலையாமல் நீயும்
மனிதத்தை மதிந்தே
நடந்திடு இங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனம் காக்கும் ஊடகம்

தட்டிக் கேட்கும்
ஊடகத் துறையும்
வாய் மூடிக்
கிடக்கிறது ஊமையாக

அரசே கண்டு
பயப்படும் ஊடகமும்
பயம் என்ற
நாடகம் போட்டே
அநீதிக்குத் துணையாய்
மௌனத்தைக் காக்கிறது




ஊடகத் துறையே
உன் சேவை
தர்மத்தைத் தினமும்
வெளிக் காட்டுவதே
அதையும் செய்யாமல்
துணை போகின்றாய்

*பாரதி மைந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீதியை நீயும்
வெளிக்காட்டியிருந்தால்
இன்று அநீதியின்
அரங்கேற்றம் நடைபெறாது




நீதியை வெளியே
மறைக்காமல் நீயும்
சொல்லி இருந்தால்
இன்றைய காலம்
நீதியாக வாழ்ந்திருக்கும்

பயம் என்ற
நாடகம் போட்டே
நீதியை மறைக்கிறாய்
அநீதிக்குத் துணையாய்
இன்றும் சொல்கிறாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்மை

பெண்மையின் அழகை
சொல்லிடவே நானும்
வார்த்தைகள் தினந்
தேடி வந்தேன்



வார்த்தையின் அழகே
பெண்மை என்றே
அன்று நானும்
உணர்ந்து கொண்டேன்

மாதவிடாய்க் காலமதில்
வலிகள் தினம்
அவள் பொறுத்தே
வாழ்வை இங்கே
நடத்தி வந்தால்

12649 CC.

265033

அவள் வலிகள்
உணராமல் நீயும்
வாழ்வை தினம்
நடத்துவதும் சரியோ?

பாரதி மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



KOHA
JPL

தாய்மையின் உருவாகி
வலிகள் தினமும்
பொறுத்தே இங்கு
வாழ்ந்திடும் இனமும்
பெண்மையடா!



அவள் அழகினையே
வர்ணிக்க வார்த்தைகள்
தினம் தேடி
கண்டேன் நானும்
அவள் தியாகத்தையே!

வணங்கிடுவேன் நானும்
அவள் தியாகத்தையே!
என்றும் காத்திடுவேன்
உலகிற் பெண்மையையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

12649 CC.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இளம் குருத்துப் பற்றி...

அண்மைக்காலமாக முகநூலில் பயணமதில் தன் எழுத்துப் பிணைப்புக்களால் என் இதயநாளங்களில் அன்பெனும் உயரிய இணைப்பினைத் தொடுத்து பயணித்து வருகிற இயல்பு நிலை எழுத்தாளர் இந்நூலாசிரியர் என்பது பெருமைமிகு பதிவாகிறது. ஈழத்தேசத்தின் முல்லை / புதுக்குடியிருப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவன்.

மதிப்பிற்குரிய திரு.திருமதி அருள்தாஸ். ஜெயசீனா தம்பதிகளுக்கு தனயனாக வந்துதித்தவன். கற்றல் வாழ்வதனில் மன்னார் /புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் இணைவு கண்டவன். கல்வி நிலையில் உயர்வது கண்டதனால் கற்பித்தல் தகுதி நிலையை முல்லை மந்துவில் அரசரத்தினம் வித்தியாலயத்தில் இலவசமாய் செய்து வந்தான்.

தன்னலம் சாராது பிறர்நல நோக்கில் அக்கறை கொண்டவனாய் சமூக விழிப்புணர்வுகளை ஏற்படுத்தக்கூடிய இவனது சொல்லாண்மை எழுத்துலகப்பிரவேசம் பல ஆக்க கர்த்தாக்களை, வாசகர்களை நேயர்களை ஈர்த்தெடுப்பதென்பது இவனது மொழி நடையில் ஆளுமை என்றே சொல்லத்தகும். எழுத்துக்கள் இயல்பாகவே பிறர் மனதை ஈர்க்கக்கூடிய வகையிலும் எழுதுபவர் சார்ந்த இனத்தையும் பண்பாடு மீதான காருண்யத்தையும் கலாச்சார விழிப்புணர்வின் பற்றுதலையும் இலகுவில் யாவரும் புரிந்து கொள்ளும் வகையில் படைப்பதென்பது ஒரு பண்முகப்படைப்பாளனாக ஒரு எழுத்தாளனை முன்னிறுத்தி நிற்கிறது.

அந்த வகையில் இந்நூலாசிரியர் நல்ல விதைகளை சமூகத்துள் விதைக்கிறார் என்பதும் அவரது முதல் நூலான "உணர்வுகளில் பாதை" சுட்டிநிற்கிறது என்பதோடு இரண்டாவது படைப்பான இந்நூலும் முளையாகி பெரு விருட்சமாகி நற்பலனை நல்கும் என்கின்ற பேரவலோடு ஈழத்து இலக்கியப் பரப்பில் தன் பயணத்தைத் தொடர்கிறது.

ஆசிரியரை பாராட்டுவதோடு இவ் நல்லுலகிற்கு மைந்தனை பெற்று வளர்த்துக் கையளித்த பெற்றோருக்கும் நன்றியுணர்வுகளைப் பகிர்ந்து அவர்தம் கரம் பற்றி நிற்கிறேன்.

நன்றி

அன்புரிமையுடன்
து.திலக் |கிரி| சுவிஸ்லாந்து

ISBN 978-955-71109-0-5

Printed @ Jeyasri, Jaffna. 021 221 9129

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org